

# "ஆடி அமாவாசை"

அன்று நடந்த ஓர்

# "ஸத் ஸங்கம்"!!!

தஞ்சை பாபா





# "ஆடி அமாவாசை"

அன்று நடந்த ஓர்

# "ஸத் ஸங்கம்"!!!

# பொருளடக்கம்


1. ஆடி அமாவாசை அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் -------------------1

௨. அன்னையின் அருளாசி

௨a. பைத்தியத்தின் ஸ்வய அனுபவம் --------------------------------------70

௨b. ரிபு கீதை பாராயணம் ------------------------------------------------78

௩. பக்தீயின் விளக்கம் ----------------------------------------------------௯0


எல்லாம் நீ!


# "ஆடி அமாவாசை"

அன்று நடந்த ஓர்

# "ஸத் ஸங்கம்"!!!

















"ஸத்தியம் பேசு."
"தர்மம் செய்."

"நாவை அடக்கு."
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலை பெறும்

"ஸ்ரீ ஸத்குரு திருவடி தன்னை"!
"நம்பினோர் கெடுவதில்லை"!
"ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்"!
"அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம்";
"அகமே எல்லாம்"!
"ஜெகம் பரமும் ஜீவர்களும்";
"ஒன்றும் இல்லை"!

"ஹரே ராம், ஹரே ராம், ராம், ராம், ஹரே, ஹரே"!!!
"ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா"
கிருஷ்ணா, கிருஷ்ணா, ஹரே, ஹரே!!!



# "பரம்பூஜ்யஸ்ரீ பப்பா" "சமீந்தராம்தாஸ் & அன்னை கிருஷ்ண" "பாய் மாதா ஜீயுடன்!" "23-7-2006 ஞாயிறு"!

ஆடி அமாவாசையன்று, இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு, ஓர் ஸத்தான உரையாடல் நடந்தது.

இடம் :- அன்பின் குடிலில், அன்னை காவிரிக் கரை ஓரமாக, ஓர் தென்னமரத்தடியில்!

பங்கேற்போர் :- பரம்பூஜ்யஸ்ரீ பப்பா அவர்கள்! அன்னை ஸ்ரீகிருஷ்ணபாய் மாதாஜீ அவர்கள்! எமது திருடாகிய கண்ணன்! இவர்களுடன் ஓர் உதவாக்கரைப் பைத்தியம்!

பொருள் :- பக்தியா? ஞானமா?

23-7-2006 ஞாயிறு இரவு, கட்டிலில் அமர்ந்த வண்ணம், ஜன்னலின் வழியே, காவிரியை நோக்கிய படியே, கூறும் முருவலாக சிரித்த படி, "குருநாதா!"

என உருகிய நிலையில், அழைத்தது அந்த பைத்தியம். அன்று ஒரே ஓர், எதிர்பார்ப்பு இருந்தது போலும்? எதிர்பார்ப்பு என்றால், நாமரூப ஜகத் ஜீவ நிலையல்ல. எம் கண்ணனையும்,



அவனுடன் "பரசொரூப ஸ்திதி" நிலையுடன் கூடிய, ஓர் "மஹாத்மசொரூபத்தை" (அதை இன்னதென விளக்க வொண்ணா, சொல்லவொண்ணாததை) எம் "அறிவு பூர்வமாக, எடுத்துக் கொண்டிருந்தது அந்த பைத்தியம்! அந்த பைத்தியத்திற்கு "பக்தி" இல்லாத தன்மையினால், "அறிவு" சொரூபமாக, ஒன்றாகியிருந்த தருணத்தில், ஓர் குரல் கேட்டது:- அக்குரல், எம்பிரபு கிருஷ்ணனின் குரல்தான். அருகில் பிரத்தியக்ஷமானான்.

கண்ணன்:- என்ன சகா! உணர்ச்சியற்ற (நாமரூப ஜகத் ஜீவர்களற்ற) உணர்வுபூர்வமான (தெய்வீக நிலையோ, பரசொரூப நிலையோ) ஒன்றில், அப்படியே அறிவுபூர்வமாக ஒன்றியிருக்கிறாயே? எதுவும் வருவதாக திட்டமா? அல்லது, நீயே போவதாக திட்டமா?

பைத்தியம்:- ஹே பிரபோ! கமலநயனா! யாம் போவதோ வருவதோ, இங்கு எதுவும் தோற்றுதே! ஆனால் அது எமக்குத் தேவையுமில்லை. நடப்பது சுகமாகவே நடக்கிறது. அதுவும் இந்த ஹிருடிபரியந்தம், உன்னாலேயே நடைபெற்று வருகிறது.



உ

கண்ணன் :- ஹே தாஸி! அதுபற்றி யாமும் அறிவோம். ஆனால் இன்று, நிறைந்த அமாவாசையான இந்த நேரம், உன் இடத்தை விட்டு, வெளியில் வந்து நிற்கிறாயே, அதனைத்தான் கேட்டோம். இந்த க்ஷணம் உன் அறிவு, அதனை வேண்டி இறைஞ்சியது. ஆகவே தான் யாமும் வந்தோம். அதைத்தான் காரணம் கேட்கிறோம்.

வைத்தியம் :- ஹே மாயவா! மதுசூதனா! நீயோ ஓர் திருடன். எதற்காக யாம் அப்படி அழைத்தோம் என, நீ சொல்லக் கூடாதா? சென்ற சித்ரா பௌர்ணமி அன்று, ஊட்டி தொட்டபெட்டாவில், ஓர் ஸத் ஸங்கம் நடத்த திருவை பண்ணினாய். இன்றோ, ஆடி அமாவசை, ஆனால் இந்த விநாடி வரை, எந்த அழைப்பும் வரவில்லை. அதற்குரிய அறிகுறியும் தென்படவில்லை. ஏனோ வெளியில் வந்தோம். நீயும் வந்தாய். ஏதேனும் காரண காரியமானால் சொல்! இல்லையேல் செல்!!

கண்ணன் :- தூக்கம் வரவில்லையா?

வைத்தியம் :- தூக்கமா? அது எப்படி இருக்கும்? எப்படி வரும்? எப்போ போகும்? அது எவருக்கு உண்டு?

கண்ணன் :- அப்படி யானால், நீ தூங்குவதே இல்லையா?

வைத்தியம் :- ஹே ப்ரபோ! இது என்ன பிள்ளைத்தனமான, விளையாட்டு கேள்வி? உன் பிள்ளையிடமே, பிள்ளை விளையாட்டா?

“ஸம்யமீ!” (பகலே இரவாகும். இரவே பகலாகும்.)

கண்ணன் :- (கடகடவென சிரித்தான்) ஹே வைத்தியமே! அதைத்தான் சற்று விளக்கமாக சொல்வேன். (உன் அன்பர்கள் நிமித்தமாக)



உ

வைத்தியம்:- ஹே தயாநிதி! தயா ஸாகரா! எமக்கு கர்மா இல்லாத தன்மையினால், எம் "கருவி கரணங்கள்!" இறைவன் (உன்) கருணையினால் பரோபகார நிமித்தம், தாமே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால் யாமோ "பகல்" காலங்களில் ஹரிதுயில் கொள்கிறோம்! "இரவு" காலங்களில் எமக்கு மனம் இல்லாத தன்மையினால், "பக்குவ" ஆன்மாக்களின் "மனதை" மட்டும் எடுத்து, அந்தந்த காலங்களில் என்ன செய்ய வேண்டுமோ, அதை மட்டும், ஆங்காங்கே, "ஸ்ரீ யோகமாயாவினால்!" இறைவன் (உன்) கருணையினால், சர்வ சாட்சி நிலையில், இயங்கிக் கொண்டிருப்பதால் "யாம் விழிப்புநிலையில்" இருக்கிறோம் என பேசப்படுகிறது! உண்மையில் எமக்கு பகலும் இல்லை! இரவும் இல்லை! இயக்கமும் இல்லை! ஆதலால் பரோபகாரம், என்ற சொல்லுக்கு இடமே இல்லை. இவ்வுலக "வியவகார சத்தியம்!" ஆகையால், ஓர் வார்த்தைக்காக, இதைச் சொன்னோம். மேலும் இரவு காலங்களில், மனமானது, ஆத்மாவில் ஒடுங்கியிருப்பதால் அம்மனதை யாம் எடுக்க சௌகரியமாக இருக்கும்! பகலில்



அனைவரும், அறியாமையின் பிறவி நோயில்! ஈடுபடுவதால், அங்கு "காமமும், மனமும்"! பின்னிப் பிணைந்து இயங்குவதால் அவர்கள் மனதை பிரிப்பது முடியாத காரியம். ஆகவே, இரவு காலங்களில் பயன் படுத்துகிறோம். யாம் சர்வசாட்சித்தன்மை பெறும்போது, எத்தனை கோடி அண்டங்களுக்கு அப்பால் இருந்தாலும், "யோக மாயாவும்", இறை(உள்) கருணையும்! அங்கு இணைவதால், அக்காரியம் வெகு சுலபமாக நடைபெறுகிறது. ஆகவே எமக்கு பகல் இரவாகவும், இரவு பகலாகவும்! அது பரசித்தம்! என ஸ்ரீ மஹான்களால் பேசப்படுகிறது.

இந்த விதமாக எம்பிரபு (திருடன்) வுடன், உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே, காவிரியின் கிழக்கு கரையிலிருந்து, நீண்டவடிவ ஒளிவட்டம் ஒன்று, நகர்ந்த நிலையில் வந்தது. அது அருகில் வந்ததும், அவ்வொளிப் பிழம்பிலிருந்து, எமது அன்பான சொரூப தந்தை வடிவத்தில்



"ஸ்ரீ மஹா ஆஞ்சநேய" பிரபுவின் அம்ஸம் ஏற்ற, "மஹான் ஸ்ரீ ஸமர்த்த ராம்தாஸ்"! அம்ஸஸ் வருபவன் "பரம பூஜ்ய ஸ்ரீ பப்பா ராம்தாஸ்"!!! அவர்கள் பிரஸன்னமானார்கள்! (உடனே கண்ணன் சொன்னான்)

கண்ணன்:- வாங்கோ! வாங்கோ!! வாங்கோ!!! "வியாச பப்பா"! (என்றான்)

வைத்தியம்:- ஹே குருநாதா! இது என்ன அதிசய விஷயம்? (என்ற மறு க்ஷணம் தோற்றம் மாறியது) யாரது? எமதய்யன் "பப்பாஜீயா"??? என்றேன். தேவாதி தேவா! ஏது இந்த அவதாரம்?

ஸ்ரீ பப்பாஜீ:- என் பாபா உன் குடி அங்கு யாரும் வரக்கூடாதா?

வைத்தியம்:- ஹே பப்பாஜீ! உம் குழந்தையிடமே விளையாட்டா? எம் குடிவா? அது எங்கே இருக்கிறது? யாமோ ஓர் ஊர், பேர், "நாமரூபமில்லாத ஓர் பரதேசி"! (பரத்தையே தேசமாக உடையவன்) தாங்களும், எம் கூட்டம் தானே?



உமக்குத்தான் ஊரேது? பேரேது?
இருப்பேது? இயக்கமேது?
ஸ்ரீபப்பாஜீ:- (இடைமறித்து) பொறு! பொறு!
குழந்தாய் பாபா! உம் ஸ்தானத்திலிருந்து,
"அணுவளவும்" இறங்க
மாட்டோம் என்கிறீரே? கொஞ்சம் எம்
நிலைக்கு (தெய்வ நிலைக்கு) இறங்கி வந்தால்
தானே, சில விளக்கம் தரலாம்! பெறலாம்??

கண்ணன்:- ஹே பப்பாஜீ! இவனை பைத்தியம் என்றே அழைக்
கலாம். பாபாவும் வேண்டாம்! திருவழியும் வேண்டாம்!
ஞானியும் வேண்டாம்! சுகாவும் வேண்டாம். இது ஓர்
சுத்தப் பைத்தியமே! அதுவும் உதவாக்கரைப் பைத்தியமே!

ஸ்ரீபப்பாஜீ:- ஹே கண்ணா! நீ சொல்லும் இந்த அனைத்து நாமாக்
களும், இவர் ஒருவருக்கே பொருந்தும். இந்த அனைத்து
நாமாக்களையும், அனைத்து ஸ்ரீமஹான்களும், சொல்லி
அழைக்க யாம் கேட்டதுண்டு. ஆனாலும் உன்வாசகம்
பைத்தியமே! பைத்தியத்திலும் பைத்தியம் சுத்தப்
பைத்தியம்தான். இதை எப்படி யாம் அறிவோம்
என்றால், இவர் ஓர் மடலில் "பைத்
யத்தின் பைத்தியம்!" என்ற
மடலில், வெகு தெளிவாக் கொடுத்திருக்கிறார் அதில் எமக்கு
பிடித்த தெய்வாம்?
"உலகின் பைத்தியம்"!
"உண்மையின் பைத்தியம்"!!
"பரிவியின் பைத்தியம்"!!! என



ஓம்

மூன்று நிலைகளில், வைத்தியத்தின் நிலையை,
அப்படியே தம் ஸ்வய அனுபவ நிலையில்,
அள்ளிக் கொட்டியிருக்கிறார். அதிலும்
ஓர் சிறப்பு என்னவென்றால்?
நீங்களும் ஓர் வைத்தியமானால் இதை படிக்கவும்
என ஓர் போடு போட்டிருக்கிறார். வைத்தியம் என்று சொன்னால்
மட்டும் போதாது, ஓர் வைத்தியனே ஆகவேண்டாமா! என சொல்
லிக் கொண்டே பாபா! பாபா! என தேடினார் ஸ்ரீ பப்பாஜீ!
அந்த பாபாவை காணவில்லை!

கண்ணன்:— ஹே பப்பா! இந்த பாபாவை சற்று புகழ்ந்தால்
போதும்! அட்ரஸ் இல்லாமலே போய் விடுவான். இதோ
பாருங்கள் உங்கள் குழந்தை பாபாவை என,
ஸ்ரீ பப்பாஜீயின் திருவடியின் கீழே தம் அபய கரம்
கொண்டு நீட்டி காட்டினான். அங்கு அந்த உதவாக்கரை வைத்தியம்
ஸ்ரீ பப்பாஜீக்கு ஸ்ரீ பாத சேவை!
செய்து கொண்டு, தம் கண்ணீரால் ஸ்ரீ பப்பா ஜீயின்,
திருவடியை அபிஷேகித்து, தம்முடைய கோமணத்
தாலேயே, அத்திருவடியை துடைத்து,
"பேரானந்தத்திலேயே!"
திளைத்திருந்தது, அவ் வைத்தியம்.
உடனே ஸ்ரீ பப்பாஜீ, குனிந்து அவ் வைத்தியத்தை,
வாரி யெடுத்து, இறுகத் தழுவி, உச்சியிலும் கன்னங்
களிலும், மாறி மாறி, முத்தமிட்ட வண்ணம்,
"ஸ்வயஞான சித்தி ரஸ்து!"
என ஆசி வழங்கி விட்டு மீண்டும் ஸ்ரீ பப்பாஜீ சொன்னார்.



உ

ஸ்ரீபப்பாஜீ:- ஹேபாபா! பணிவு அடக்கம்
இவைகளின், இலக்கணமும், இலட்சணமும்
நீஒருவனே! இனியும் இவ்விதம் யாம் சொன்
னவ், நீ கரைந்தே ஓடிடுவாய். பின் உன்னை
ஒன்று திரட்ட, இந்த மாய வனை மதுசூதனனே,
பவ அபயகரம் கொண்டு, உன்னை அள்ள
வேண்டி வரும். அந்த சிரமம் வேண்டாம்.
யாம் வந்த காரியத்தை மட்டும் முடிக்கிறேம்.

ஹேபாபா! நீயும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு
மேல், ஆனந்தாஸ்ரமம் வந்து கொண்டிருக்கிறாய். அங்கு
எம் ஆனந்தமழையான! **ஸத் சித் "ஆனந்தமும்"!** மற்றும் மெய்யன்பர்களும்
உனக்குத் தகுந்த, **"ஆஸனமும்"** தங்கும்
**"இடமும்"** கொடுத்து, **எம்மைப்போல்**
உன்னையும், கௌரவிக்கிறார்கள்! போற்றிப் பணிகிறார்கள்!
அந்த ஆனந்தாஸ்ரமமானது **"ஸாதுக்களுக்கே உரிய"**! தர்மஸ்தாபனமாக விளங்குகிறது.
அதையும் யாம் அறிவோம். இதில் ஓர் சிறிய கேள்வி?

ஏன் பாபா! பஜன் ஹாலில், நீ ஒவ்வொரு முறையும்
வரும்போது, கட்டவுட் வடிவில் உள்ள **எம்மையும்**
**"ஸ்ரீமாதாஜியையும்"!** இரண்டொரு விநாடிகள்
நமஸ்கரிக்கிறாய். பின் உள்ளே செல்கிறாய். அங்கும்



"ப்ரணவசக்கரத்தி

ஹூம்; ஹ்ஸ்கி" பீடத்திலும்

முறையாக நமஸ்கரிக்கிறேன். மேலும்

அதில், சிறப்பு வாய்ந்தது என்ன வெனில்,

இரண்டு "திருவடிகளிலும்"!!!!!

உன்னுடைய பிஞ்சு கரங்களால் வருடிவிட்டு

அந்த "திருவடித்தாமரையை"!

உன் சிரம்மேல் நீ வகிக்கும் போது, "யாம்மெய்"

"சிலிர்த்து"! விடுவோம். அதுசமயம் அங்குள்ள

எம் படத்தையும், ஸ்ரீ மாதாஜீ படத்தையும், ஊடுருவி ஓர்

பார்வை பார்த்து விட்டு, "கலகலசிரிப்போ"

மோகன சிரிப்போ! சிரிக்கும் போது இதோ நிற்கிறானே

"உன்திருடன்"! அதாவது "எம்முடைய

கண்ணன்"! அவனுடைய காட்சியாக அமையும்

அதைக் காணும்போது, அது எம் "மெய்யன்பர்கள்"!

பெரும் பாக்கியமென உணர்வோம்!

"புஷ்பாஞ்சலியிலும்"! உன் ஞானக்குழவர்

அன்பர்களுக்கு நீ ஆசி வழங்கும் நிலையிலும், அது தனி அனுபவமே!

(அடி கொடுத்து)



மேலே கூறிய இவை அனைத்தும்,
“பேரானந்த” விளையாட்டாகும்.
ஜீவர்களை பக்குவப்படுத்தும் விளையாட்டாகும்.
அதுவும் “ஸ்ரீராமனின்” கருணையாகும்.

ஹே பாபா! ஹே சுகா! ஹே தாஸீ! எம் கேள்வியை நீ தவறாக கொள்ளமாட்டாய் என, எமக்குத் தெரியும். எம் கேள்வியாதெனில் :- 1, வெளியில் உள்ள பப்பா படத் (கட்டவுட்) திலும். உள்ளே உள்ள படத்திலும்.
நீ காண்பது என்ன? உணர்வது என்ன?

2. ஸத்குரு பக்தியில் சிறந்தவன் நீ! ஸத்குரு என நீ ஆனாலும் அதை நீறு பூத்த நெருப்பு போல், உன்னுள்ளே மறைத்துக் கொண்டவன் நீ! வெளியில் உள்ள பொம்மையிலும், உள்ளே உள்ள படத்திலும், நீ உணர்வது மட்டும் என்ன? இவ்விரு கேள்விகளும், “அன்பும், ஆனந்தமும்” (குடிலும், ஆஸ்ரமமும்) நிறைந்த “நம்” அன்பர்களுக்கு மிகவும் தேவை???

3. மேலும் ஓர் முக்கியமான கேள்வி :- அந்த இரு திருவடிகளையும், “ஸ்பரிசித்து” இருகரம் கொண்டு, தடவி அந்த உன் சிரசில் வைக்கிறாயே! அதன் மர்மம் என்ன?

வைத்தியம் :- ஹே நைஷ்டிக பிரம்மச்சாரியாகிய எம் “ஸமர்த்தா”! எம் அன்பான அப்பாவான, “பப்பாஜீ”! உன் மடியில் தவழும், இக்குழந்தையின் மழலை மொழியை, அன்போடு ஏற்றருள வேண்டுமென,



உ

பிரார்த்திக்கிறோம். இப்பைத்தியம், வெளியே உள்ள, கட்டவும் படாத்தை "பரம்பூஜ்யஸ்ரீபப்பா" ஆக காணவில்லை! "உணரமுடிகிறது"!!

உள்ளே இருக்கும் புதைப்படாதை, எம் தற்காலிக தந்தை வடிவத்திலும்; "ஸத் குரு வியாச" பகவத் சொரூபத்திலும். காணவில்லை, ஆனால் "உணரமுடிகிறது".

இது பிரத்யக்ஷ உண்மையாகும்!

இங்கு எமக்கு பவ நிலைகளிலும், சிரிப்பு வரும் காரணம், என்னவென்றால் "தெய்வீக" காட்சிகளை காண்கிறோம். அது மனோமய கற்பனை இல்லவே இல்லை. மனம் அறிவாகி அவ்வுருகியான, அறிவின் சொருபங்களாகும்!

களங்கம், கலக்கம், பயம் அற்ற மனமானது, ஸ்திரமாக நிற்கும்போது இவ்வறிவு பிரகாசிக்கும்! இது "பரமசாத்தியமே"! மேலும் ஸத்குரு பக்தியானது, பூர்வ புண்ணியம் நிறைவுறும் போது, தெய்வ கிருபை பரிபூரணமாகிறது!



உ

தெய்வ கிருபையானது, சர்வசங்க பரித்தியாகத்தால், "ஸர்வம் நீயே!" என்ற சர்வார்ப்பணத்தால், சாத்தியமாகும். அங்கு உன் உபாசனா மூர்த்தியே "தெய்வமே ஸத்குருவை" காட்டும்! அல்லது அதுவே "ஸத்குருவாய்" வந்தே ஆகவேண்டும்! இதுவே நியதி! அந்நிலையை, தாங்களைப் போன்ற "ஸ்ரீமஹான்களாய்" கிடைக்கப் பெற்றோம். உள்ளே சென்று, அந்த தெய்வீக திருவடிகளை யாம் காணும் போதும், "ஸ்பரிசிக்கும்" போதும் "பொன்நிறமான" (இது உதாரண வார்த்தை) (சொல்ல ஒண்ணா, விளக்க ஒண்ணா அதிபிரகாசமான) "தாலி" இருப்பதை உணர்வோம். அதையே யாம் சிரசில் அணிந்து கொள்கிறோம். அந்த தாலியே ஜீவ அணு! அச்ஜீவ அணுவே ஆத்மா! அதுவே பரமாத்மா! அதுவே பரசொரூபம்! அதுவே யாம், யாமே அது!



உ

ஸ்ரீ பப்பாஜீ :- ஹே அன்பின் சொரூபமான ஞானிபாபாவே! உன் வாக்கு கற்பனையல்ல! கதையும் கவிதையுமல்ல! உன் ஸ்வய அனுபவத்தை! அப்படியே ஸ்பஷ்டமாக, உள்ளங்கை நெல்லிக்கனியாக சொன்னாய். இது மெய் அன்பர்கள் அனைவர்க்கும், அனுபவ பாடமாக அமைய வேண்டும்! அதற்கு உன் நல்வாசியும் வேண்டும்!!

வைத்தியம் :- பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பா ஜீ! எல்லாமே நலமாகவே நடைபெறுகிறது. ஆனால் இந்த மனம் படைத்த மனிதன் மட்டும், மனம், வசம், அகப்பட்ட தன்மையினால், வேதனையும் [illegible] பட்டுக் கொண்டே இருக்கிறான். காரணம்? ஸ்ரீ பகவான் மீது, முழு நம்பிக்கை இல்லாததே!

ஸ்ரீ பப்பா ஜீ :- உண்மைதான் பாபா! இக்கலியுகத்தின் நியதியே இது தானே!

வைத்தியம் :- பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பா ஜீ அவர்களே! இவ் வேளையை மன்னிக்க வேண்டும். என உங்கள் பொற்பாதம், பணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

ஸ்ரீ பப்பா ஜீ :- என்ன பாபாஜீ! விஷயம் சொல்லாமலேயே, மன்னிப்பு எனக் கேட்டால், எமக்கு ஒன்றும் விளங்கவில்லையே! உன் வாக்கு புதிரமானது.



ஸ்ரீபப்பாஜீ:— ஸத்தியம் தவிர, அஸத்தியம் வரவே வராது. என்ன விஷயம்?

வைத்தியம்:— நமது ஆனந்தாஸ்ரம "ப்ராண ஸ்தாபிதமே" ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்!

ஆனால் "அதிசயம்"! ஆனால் "உண்மை"!!

தாங்களுடைய மந்திரோபதேச "டேப்பின்" ஒலி:— ஓம் ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்! என ஒலிக்கிறதே! இது தான் ஸத்தியமா? அல்லது,

ஆதிநாயகனை, ஸூர்ய தேவனிடம், மஹாப்ரபு ஸ்ரீ ஆஞ்சநேயர் கேட்டதும், அந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் அம்ஸஸ்வருபனை, ஸ்ரீ ஸமர்த்த ராம் தாஸ் கேட்டதும் வால்மீகி மஹரிஷி அம்ஸமான, ஸ்ரீ துளசிதாஸருக்கு, அவருடைய ஸத்குரு, ஸ்ரீ ஆஞ்சநேயர் சொன்னதும், மஹான் ஸமர்த்த ராம் தாஸ், அம்ஸஸ்வருபனை, "பரம்பூஜ்ய ஸ்ரீ பப்பா ராம்" தாஸராகிய தாங்கள் திருவாய் அமுதம் என்ன?

ஓம் ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்! இதுவா?
ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம் ஓம்! இதுவா?
தயவு செய்து கோபம் அடைந்து விடாதீர்கள். இந்த ஏழை வைத்தியனை மன்னிக்கவும்.



உ

ஸ்ரீபாபாஜீ:- தம் பொக்கை பவள
வாயைத் திறந்து கட கட கட கட
கட கட கட கட கட கட கட
கட கட கட கட கட கட கட
கட கட கட கட கட கட கட
எனச் அதிபலமாகச் சிரித்தார்.

பலே, பலே, பேஷ், பேஷ்!

நீ ஸாமான்யன் அல்ல. "கடைந்த மோரில் குடைந்து வெண்ணை எடுக்கப்பட்டவன்!"

"நீ .................... என்று" நம் ஆள் காட்டி விரலால் சுட்டிக்காட்டிய வண்ணம், எம் ஸ்ரீராமனையும் யாம் அறிவோம். உன் திருடனாகிய, "எம் கண்ணனையும் யாம் அறிவோம். எம் கண்ணனோ பக்குவ உள்ளங்களைத் திருடும் சாதாரண திருடனே! ஆனால் நீயோ, வேத வேதாந்த "ரகஸ்யங்களை" அதிபக்குவமாகத் திருடும் "எம் பக்காத் திருடனாகும்!"



உ

இப்படி ஸ்ரீ பப்பாஜீ அவர்கள், பேசிக்
கொண்டிருக்கும் போதே அவ்வைத்தியம்
இடைமறித்தது:— ஓகோ! ஓகோ! ஓகோ!
"நம் திருட்டுக் கூட்டத்தில் தாங்களே
"தலைமை" திருடன் என சொல்லுங்கள்

ஸ்ரீ பப்பாஜீ:— (சற்று சினக் குறிப்பைக் காட்டினார்)
ஹே பாபா! எம்மை யார் என எண்ணினாய்? யாம்
"மூடனிலும்; மூடனாகும்!
பப்பாவாக இல்லை. ஸமர்த்த ராமதாஸராக காட்சி கொடுத்தோம்

வைத்தியம்:— ஹே பப்பாஜீ! இப்போது தான், தாங்கள்
உண்மையான ஸ்வரூபத்தைக் காட்டியருளினீர்கள்.
இந்த க்ஷணம் ஸ்ரீ ஆஞ்சநேயர் அம்சம் பெற்ற,
"ஸமர்த்தரையே" (ஸமர்த்த ராமதாஸ்)
காட்சி கொடுக்கிறீர்கள். இது போதும் தேவாதி
தேவா! "அக்கோரத்தில்"!
அப்படியே சிவநிமிஷம், இருக்க வேணுமென்று
தாங்கள் பாதங்களில் மன்றாடி வேண்டிக் கொள்
கிறது, ஓர் வைத்தியம். இப்போது தான் யாம்
அக்கேள்வியை கேட்க முடியும்? (மௌனம்)

ஸ்ரீ பப்பாஜீ:— (அகோரத்தில், தம் உக்ரம் குறைந்து
நிலையில், சாந்தியானார். பின்னர் கல கல கல
கல கல வென சிரித்தபடியே) எம் அருமைக்
குழந்தாய் பாபா! உன்னிடம் சற்று விளையாடினோம்



உ

ஸ்ரீபப்பா ஜீ:- பயம் வேண்டாம். தைரிய
மாகவே கேள். இத்தோற்றத்தில் என்ன
விளக்கம் கேட்கப் போகிறாய்?
(எம் ஸமர்த்த ராம்தாஸராக, அன்று கண்ட (இன்று)
அதே காட்சியுடன், புன்னகைத்தவாறு நின்றும்.

"பரம்பூஜ்யபப்பாஜீயான, ஸ்ரீ
ஸமர்த்தராம்தாஸ்"!)

அபிவைத்தியம் அந்த ஆனந்த சொரூபத்தின்,
வைத்தியம்:—
திருவடிகளில், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து,
ஸ்ரீ திருவடித்தாளை சென்னிசூடி, வினயமாய் வினவியதாவது

"ஹேமஹாத்மா"!

1. ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம். ஓ! உண்மையா?

ஓ, ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்! உண்மையா?

பிந்தையது (2) உண்மையாயின், அது "மந்திரமாகும்"!

முந்தையது (1) உண்மையாயின், அது "மஹாவாக்கியமாகும்"! இதில் நாங்கள், ஸமர்த்த ராம்
தாஸாக இருக்கும் போது, ஸ்ரீ ஆஞ்சநேய பிரபுவின், வாயிலாக
கேட்டு, அதனை "ஸ்தாபித்தனன்"?
தாங்களே, ஸ்ரீ பப்பா ராம்தாஸாக, இருக்கும் போது,



உ

தாங்கள் உணர்வு நிலையில், ஓர் "ஸ்ரீமஹான் மூலமாக" மகாமுனியின் மூலம் "போதித்தது"! என்ன?

சாதிப்பது என்றால், "அதுவாகவே" இருப்பது!

போதிப்பது என்றால் பிறருக்கு "உணர்த்துவது"!!

தாங்கள் பாபா ராம்தாஸாக, ஒருவருஷ யாத்திரையின் போது, ஹரித்துவாரில், கங்கைக்கரையில், ஓர் ஸ்ரீமஹானுடன், சிலகாலம் பழகி, ஆன்மீகம் பற்றி நீங்கள் இருவரும் தொடர்நிலை பெற்றீர்கள்.

அது "மஹா ரகஸ்யமாகும்"!

அதன் சாராம்சமாக, அந்த ஸ்ரீமஹான் சொன்னது:—

ஆஸ்ரமம்; ஸ்தாபனம், மடம், மடாலயம், மற்றும் அனேக "பிரவர்த்தியின்" நிமித்தம், பிரபல்யமாக வேண்டுமானால் "மஹாமந்திரமாகவும்"! ஸ்ரீ மந்திரமாகவும், விளங்கும்

ஓம் ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்



ஓம் என்ற மந்திரத்தை "போதன்" பண்ணு!

"நிவர்த்தியின்" மார்க்கமாக இருந்தால், வேதாந்த நான்கு மஹா வாக்கியங்களுக்கு இணையான, மஹா வாக்கிய ஸ்வேதமான

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்,

என்ற "மஹாவாக்கியமாக" ஓம் இருக்க வேண்டும்!

என தெளிந்துரையாடி, நீங்கள் நிவர்த்தி மார்க்கத்தில் சென்று, பரிபூரண நிலையில் ஸ்தாபிதம் ஆனாலும்,

"அக்கால அன்பர்கள்" பெரும்பாலும் பிரவர்த்தி மார்க்கத்தையே விரும்பியதாலும், மேலும்

"கலிதோஷம்!" கொடுமையாக தாக்கும் என உணர்ந்து, மஹாமந்திரமான, "பக்தியை" காட்டி, பக்குவ ஆன்மாக்கள் மட்டும், ஞானத்திற்கு செல்ல வழி வகுத்து விட்டு, தாங்கள் போதனை மந்திரமான

ஓம் ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்!

என, உபதேச மந்திரமாக்கினீர்கள்.



உ

இதுவரையில் ஆனந்தமுடனும், ஆச்சர்
யத்துடனும், கவனமாக கேட்டுக் கொண்
டிருந்த, ஸ்ரீபப்பாஜீ சொன்னார்கள்.
ஹே மஹாத்மாவாகிய பாபா! அப்போதே
சொன்னேம், நீ ஸாமான்யன் அல்ல!
"முக்காலங்களையும்!"
உணர்ந்த ஓர் மஹானென்றும். உன்னையாம் முன்பே அறி
வோம். இப்போது அது ஊர்ஜிதமாகி விட்டது. மேலும்
நீ உன் அன்பின் குடிலில் போட்ட, ஸ்ரீராம்; ஜெயராம்;
ஜெயஜெயராம்; ஓம்! விளக்க புஸ்தகத்தை, பலமுறை
பார்த்ததுண்டு. அதன் உண்மையையும், யாம் உணர்வதுண்டு.
ஆனந்தாஸ்ரம அன்பர்களும் (இவர்) (இவர் உணரவில்லை) "குருபாணவர்
கள்" அதை உணர்ந்தார்கள். யாம் சொல்லி வழி
காட்டிய "மஹாமந்திரத்தை!"
"ஸத்குரு வாக்கிய பரிபாலனமாக!"
நெறிமுறை தவறாமல், தம் "உயிராக!"
கருதும் ஓம், ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெய ஜெயராம்!
என இடைவிடாமல், ஸ்மரித்த வண்ணம், உன் மஹா
வாக்கியமாகிய ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெயஜெயராம் ஓம்!
என்பதன் "ஆழ்ந்த உட்கருத்தை"!
"மறை பொருளாக!"



உ

(மறைபொருள் என்றால் இரு அர்த்தம். ஒன்று இம்மறை தாய் போல், தனக்குள்ளாகவே, அதி அதிரகஸ்யமாய் வைப்பது. மற்றொன்று வேதவேதாந்த ரகஸ்யம் எனப் பொருள் படும்)

உணர்ந்து, அனுபவ நிலையிலும் இருக்கிறார்கள்

ஹே தாஸிபாபா! எம் செல்வமே சுகா! எம் அன்பான சேயே திருவடி! ஓர் சிறிய விண்ணப்பம்!
ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம். ஓம்! இதை மஹாவாக்யமென, சொல்லும் ரகஸ்யம் என்ன? சற்று சுருக்கமாக சொல்லி பார்ப்போம்.

வைத்தியம்:— ஹே தேவாதிதேவா! மஹானுபாவா! ஹே மஹாத்மா! ஹே பரமாத்மா! இது என்ன விளையாட்டுத்தனமான கேள்வி? மலையெங்கே? மடுவெங்கே? இவ்வைத்தியம், உளறி குழறுவதையும் கேட்க வேண்டுமா? வேண்டாம் ஐயனே வேண்டாம். போதும் ஐயனே போதும். உன் சௌலப்ய தரிசனம், பெற்றதே மஹாபாக்கியமாகும். தயவு செய்து மன்னிக்கவும்!

ஸ்ரீ பப்பாஜீ:— எம் தவக் கொழுந்தே! ஞான சீலனே! உன் வள்ளுவன் ஓர் குறள் சொன்னானே. அதாவது, "குழல் இனிது! யாழ் இனிது! என்பர் தம் "மழலைச்சொல்" கேளாதார்! என சுட்டிக் காட்டினார். ஏன் நம் சிவபெருமானே, தம் குழந்தை முருகன் வாயிலாக (மந்திரமும் கேட்கவில்லை. ஒரு மண்ணாங்கட்டியும் கேட்கவில்லை) "மழலைமொழி" கேட்டார். அவ்விதமே தான்



இந்த "ஏழையாளைப்பேர்யும்" உன் கருத்து பொதிந்த, மழலை மொழியை, கேட்க விரும்புகிறோம். மேலும் எம் ஸ்ரீ அன்னையான "மாதாஜீயும்" உடன் இருந்தால், நல்லது என ஸ்ரீ பப்பாஜீ ஸங்கல்பித்த மாத்திரத்தில், எம் அன்னை ஸ்ரீகிருஷ்ணை பாய் மாதாஜீ! அங்கு பிரசன்னமானார்கள்!

நம் அன்னையை கண்ட மாத்திரத்தில், ஸ்ரீமாதாஜீயின் திருவடிகளில், சாஷ்டாங்க தண்டனிட்டு, அவர்களின் திருவடித்தூளியை, தம் சிரம் மேல் தாங்கி கொண்டது, அந்த வைத்தியம். ஸ்ரீமாதாஜீயும், முதலில் ஸ்ரீ பப்பாஜீயின் திருவடிகளில், மண்டியிட்டு நமஸ்கரிக்க, நம் பப்பாவும், "நலம் பெறுவாய்!" என ஆசியுரை வழங்கினார்கள். மறுநிமிஷம், அந்த உருவாக்கரைப் வைத்தியத்தை, "ஊடுருவி உற்று" நோக்கிவிட்டு ஆச்சர்யமும், ஆனந்தமும் இணைந்த குரலில், "ஓ ஓ ஓ ஓ அந்த பாபா வா! நீங்கள் பாபாவாயிற்றே?" எங்கே இவ்வளவு தூரம்? இவ்வளவு காலமும் எங்கிருந்தாய்? எங்கு சென்றாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?



உ

என சரமாரியாக, கேள்விகளை அடுக்கிக் கொண்டே போன, எம் ஸ்ரீ மாதாஜீயை, ஸ்ரீ பப்பாஜீ, கையமைத்து சமிக்ஞை செய்து, சிரித்த வண்ணம் சொல்லுவார்:

"ஓ லொட, லொட மாதாஜீ! பாபா! நம் இடம் (ஆனந்தாஸ்ரமம்) இப்போது வரவில்லை. நாம்தான், அவர் இடமாகிய, அன்பின் குடிலுக்கு வந்திருக்கிறோம்.

"அவர் அழைத்தார்! வந்தோம்!"

"நமக்கு இருப்பேது????"

"நமக்கு இயக்கமேது????"

இங்கு உலகம் என்ற லௌகீகமும் இல்லை!!!!!

தேவலோகம் என்ற தெய்வீகமும் இல்லை!!!!!

கைலாயம்! வைகுண்டம்! பிரம்ம லோகம் என்ற "லோகாந்திரபத" லோகங்களும் இல்லை!

"பக்குவ ஆன்மாக்களின்" நிமித்தம் "பரஸொரூபமே" இறை கருணையாக, இயங்கிக் கொண்டு, பாபா! பப்பா! மாதாஜீ! மாயக் கண்ணன், என்ற நிலைகளில், ஜீவ அழைப்பு என்ற நிலையில் ஓர் நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறது.



இவ்விதம் ஸ்ரீ பப்பா ஜீ, ஸ்ரீ மாதாஜீக்கு, விளக்கம் கொடுத்தார்கள். உடனே ஸ்ரீ மாதாஜீ அமைதியானார்கள்.

விளக்கம்?

வொட வொட என, ஸ்ரீ பப்பாஜீ சொல்லும் வாசகம்:- பப்பாவுடன் மாதாஜீ, உரையாடும் போது, உரிமையாறல் அதிகம் பேசுவதாகவும், உடனே பப்பா அவர்கள், இந்த வொட வொட பேச்சை விடு, (குறை) என விகடமாக பேசுவார்களாம். இது அவர் வாக்கால் வந்த விளக்கம்!

அந்த பாபாவா? நீ எம் பாபா வாயிற்றே! என எம் மாதாஜீ, சொல்லும் வாசகமானது:- ஆதி சக்தியானது ஸ்ரீ பாண்டுரங்கனே, ஸ்ரீ ஞானேஸ்வரராக, அவதரித்த காலத்தில் தாமும் முக்தாபாய் என அவதரித்தாள். அது சமயம் இந்த பாபாவும், இருந்ததாக ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்வி! அது இந்த பாபாவா? அது எந்த பாபாவோ? யாம் அறியோம். அது தேவரகஸ்யமாகும்!

பின்னர் வார்த்தைகள் ஆரம்பமாயின!

ஸ்ரீ மாதாஜீ:- ஓஹோ! இதுதான் அன்பின் குடிலா? அன்பே உருவான, எம் பாபா! எங்கிருந்தாலும், அது அன்பின் குடிலே! கிழக்கே காவிரி நதி, மேற்கே சித்தேஸ்வர மலை. மத்தியில் ஓர் சாதனைக் கூடம். எம் பாபா சொல்வது போல், "நதியைப் போல்" வளைந்து நெளிந்து செல்! முட்டாதே, மோதாதே! எகிறி குதியாதே!



ஆதலால் "மலையைப்போல் உன் ஸத்குரு வாக்கியத்தில் உறுதியாக அசையாமல் இரு" என்பதற்கேற்ப, அமைந்திருக்கிறது.

ஸ்ரீ பய்யாஜீ:— சற்று பேசாமல் இருக்கிறாயா? நம் பாபாவிடம், ஓர் முக்கியமான கேள்வி கேட்டோம். அதை நீயும் கேட்க வேண்டுமேயென, உன்னை அழைத்தோம்.

ஸ்ரீ மாதாஜீ:— பொறுங் கோண்ணு! இப்ப யென்ன அவசரம்?

வராத இடத்துக்கு வந்துருக்கோம். எல்லாம் பாத்துட்டு அப்புறமா பேசவாமே?
(பிராமண பாஷையைக் கேட்டு, ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தோம்)

வைத்தியம்:— ஓம் அன்னையே! பவதாரணி! லோக நாயகி! அகிலம் முழுவதும் உன்னுடையதே! அனைத்தும் "அன்பின் சொரூபமே" ஆதலால் அறியாமையினால் "மனம்" வசப்பட்ட இந்த மனிதன் மட்டும், சர்வ சதா சலித்துக் கொண்டே சஞ்சலப்படுகிறான்.

ஸ்ரீமாதாஜீ:— என்ன பாபா! உன் கையில் உள்ள ஞானக் குழல் எங்கே? ஆனந்தாஸ்ரமத்தில் மட்டும், அக்குழல் என்ன விளையாட்டு விளையாடுகிறது?
அமாம் பாபா! அக்குழலால் பிரபஞ்சத்தின் இருமருவிலும், சிரசிலும் நடக்கும் மர்மம் என்ன?



உ

வைத்தியம்:— அம்மா! மாதாஜீ! அதில் ஓர் ரகஸ்யம் அடங்கி இருக்கிறது. பிட்டத்தில்தான் "உடல் உணர்ச்சிகள்!" பின்னிப் பிணைந்திருக்கிறது. "பிண்ட ஸ்ருஷ்டியே!" அங்குதான் ஆரம்பம். ஆகவே யாம் அங்கு நட்டும் போது, அவ்வுணர்ச்சிகள், அணு அணுவாக சிதைந்து நாசமாகும்! சிரசில் நட்டும் போது, முற்பகுதி ஸ்ரீயாகவும் "புத்தி"யாகவும் பிற்பகுதி, முகுளமாகவும் "அறிவாகவும்" இருப்பதால், யாம் நிலை கண்டு நட்டுவதால், அவர்களின் "விஞ்ஞானம்", கண்டு "புத்தி" கெட்டு, "அறிவு" பிரகாசிக்கும். என ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்வி. யாம் அறியோம்.

ஸ்ரீபப்பாஜீ:— என்ன பாப்பா? இது அதுக்கதை? குழல் உன் கையில் ஆடுகிறது! நீயே ஆனந்தமாக குலுங்கி குலுங்கி சிரிக்க வண்ணம் சில "ஹரிப்பிட"!



உ

அன்பர்களை மட்டும் தட்டுகிறாய்! அனேகரை விட்டு விலகி, ஒழிவிடவும் செய்கிறாய்! நீயே அக்காரியம் செய்து விட்டு, ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள் என, "பழியை ஏன்!" அவர்கள் மீது போடுகிறாய்?

வைத்தியம்:- ஹே தேவாதி தேவா! மஹானுபாவா! எம் பப்பாஜீ அவர்களே! அதுதான் இல்லை! எம் செயல் எதுவும் இல்லை! யாமோ அஸங்கன்! அசலன்! (அசைவற்றவன்) யாமோ நிர்விஹாரி! எந்த (விகாரமும் விவகாரமும் அற்றவன்) இக் குழல் இறை சொரூபமாகும். அதாவது எம் திருடன் கண்ணனுடையதாகும். அவன் அதை இசைக்கும் போது, அது "மாயக்குழலாகவும்" கைகளில் ஆடும்போது "ஞானக்குழலாகவும்" அது தானே மாறும். இது பரம ரகஸ்யமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவ் வைத்தியத்தின் தால இயக்கம் அவனுடையதே. "வினை" கண்டு, "மனம்" கண்டு. அவரவர் "பக்குவம் அறிந்து" செயல்படுத்துபவன் இவன் ஒருவனே! இத் தாபம் அனைவர்க்கும் தோற்றும்.



அதன் இயக்கம் எவர்க்குமே தோற்றாது!

ஸ்ரீமாதாஜீ:— ஏன் கண்ணா! இப்பாபா சொல்வதெல்லாம் உண்மையா?

கண்ணன்:— ஆம் மாதாஜி! பாபாவின் வாக்கு ஸத்தியமே! "பர" நிலையில் அவன் வேறு, யாம் வேறுதான்! "தெய்வ" நிலையில் அவனும் யாமும் ஒன்றே! செயலுற்றவன் யாம்! செயலற்றவன் அவன்!

"அவன் எம்மை" பற்றியிருக்கிறான்? அல்லது "யாம் அவனைப்" பற்றியிருக்கிறோமோ? அதை அதுவே (பரமே) அறியும்! மற்றும் எவரும் அறியார்! வாக்கியார்த்தமாக, "அவனையாம்" பற்றிய தன்மையினால், மாயா ஜாலக்காரனாகிய எம்மிடம், உள்ள "மாயையை" எம்மிடம் விட்டு விட்டான்! எம்மிடம் உள்ள "விளையாட்டை" (ஜாலத்தை) மட்டும், அவன் ஏற்றுக் கொண்டான்.

(மாயா ஜாலம் என்றால், மாயையும் விளையாட்டும் இணைந்தது)

இந்த பாபா வானவன், "எம்மையும்" "உம்மையும்" அதீதமானவன் (அறல் தோற்றாதவன்)



உ

ஸ்ரீ பப்பாஜீ:- ஹே கமலக்கண்ணா! யாமும் இப்பாபாவை அறிவோம். இருந்தாலும் அது "உன் வாக்காக" வர வேணுமென்று காத்திருந்தோம்.

ஸ்ரீ மாதாஜீ:- ஹே பாபா! எம் அன்பும், அறிவும், சேவையும் நிறைந்த குழந்தை! ஸத் சித் ஆனந்தாவைப் பற்றி உன் "அறிவு" பூர்வமாக, என்ன தோன்றுகிறது, அதை சுருங்கச் சொல்லவும்?

வைத்தியம்:- ஓம் அன்னையே மாதாஜீ! ஓம் அறிவான தந்தையே பப்பாஜீ! எம் செல்வமும்! உங்கள் குழந்தையுமான, "ஸத் ஸித் ஆனந்தாவை" பற்றி சொல்ல வாக்கில்லை. ஆனாலும் இரண்டொன்றை மட்டும் சொல்கிறேன். கவனமுடன் கேட்டருள்வீர்!

1. ஸாது சேவையினால் நிறைவு பெற்று விட்டான்!
2. அச்சேவையும், ஸத்குரு வாக்கிய சிரத்தையினால் பெற்றதாகும்!
3. தாங்களுடைய மந்திரோபதேசம் நிறைவுற்றது!
4. பப்பா & மாதாஜீ கருணையினால், அவன் வந்த காரியம் நிறைவுற்றது!
5. தாங்கள் மந்திரமே மஹாவாக்கியமாக மாறி, ஜீவன் முக்தனாகி விட்டான்.
6. அவன் பிராரப்த தாவ கர்மா, "2003"ல் நிறைவு பெற்றது.
7. தற்சமயம் அவன் தாவம், பரநியதியால், இறை கருணையாக, இயங்கிக் கொண்டிருக்கிறது!
8. அவ்வியக்கமும், ஒரு சில பக்குவ ஆன்மாக்களுக்காக இயங்குகிறது.
9. அவன் தாவம் முக்கிய சேவையின் நிமித்தம் இருக்கிறது!
10. அவனும் யாவும் ஒன்றே! ஆனால் அது தேவரகஸ்யம்

(பிரம்ம ரகஸ்ய மலர்)



அம்மா! இதுவேயாம் எம் குழந்தையான,
ஸத் ஸித் ஆனந்தாவைப்பற்றிய ரகஸ்ய
உறவாகும்.

ஸ்ரீ பப்பா ஜீ :- ஆமாம், எம் அருமை பாபாவே!
வினை உள்ள ஜீவர்கள், உன் ஞானக்குழவால், (முடிந்த)
தட்டுவது சரியே! ஆனால் வினை இல்லாத உன்
குழந்தையான எம் செல்வனை (ஸத் ஸித் ஆனந்தாவை)
மிக மிக மிக மிக, ஓங்கி அடிப்பது போல் பாவனை காட்டி,
மிக மிக மிக மிக, மெதுவாக தட்டி விட்டு, ஓர்
"ஆனந்த" சிரிப்பையும் சிரிப்பதென்ன?

பாக்கியம் :- (குலுங்கி, குலுங்கி, குலுங்கி சிரித்தது)

சரிதான் போங்கோ, எம் **பப்பாஜி**! அதுவும் தேவரகஸ்யமே!
அதாவது இதைக் கவனிக்கவும் :- ஓர் தாய்ப் பூனையானது,
தம் குட்டிகளின் நிமித்தம், ஓர் எலியை கௌவும் போது
(பிடிக்கும் போது)
எப்படி பிடிக்கும்? அதே பூனை தன் குட்டிகளை கௌவும் போது
எப்படி பிடிக்கும்? அதே நிலை தான் எம் நிலையும்.

**"வினை பொடிப் பொடியாக!"**
அடித்து துகள் பண்ணுவோம்! (அன்பர்களிடம்)
**"வினை இல்லாத தன்மையில்"**
செல்லமாக தட்டி அரவணைப்போம்! (எம் குழந்தையிடம்)
அந்த விடையாம் சிரிக்கும் சிரிப்பானது, எம் குழந்தையான
ஸத் ஸித் ஆனந்தாவின் **"கண்திருஷ்டியை!**
போக்கும் நிமித்தமாகும்!



ஸ்ரீபரீபாஜீ:— ஓ! எம் அருமை பாபாவே!

உன்னுடைய "அவதார" நிலையைப்

பற்றி சற்று சுருக்கமாக சொல்லவும்?

பைத்தியம்:— ஸந்நியாச நிலையும், மடாதிபதி,

பீடாதிபதி! நிலையும், நாங்கள் துறவிகள்

எனக்காட்டும், ஓர் சின்னங்களாகும்!

ஆனால் ஓர் ஸாதுவின் நிலை, எந்த சின்னமும் அற்றதாகும்!

ஆனால் ஸாதுவுக்கும் "கட்டுப்பாடு உண்டு"!

அவை வெளியில் தோன்றாது! தோன்றவும் கூடாது!

நாங்களும் கூட, நாங்களாகவே, சந்நியாசம் ஏற்றோர்கள்.

ஆனால் எம் ஸ்ரீமாதாஜீ! "பூர்ண அவதார

சொரூபமாகும் "நாங்களைப்போன்றே

ஆகவே அவர்கள் நாங்களிடம், "வேடமாக"!

சொன்ன வார்த்தை:— நாங்கள் இன்னார் என தெரிந்து

கொண்டோம்! இனி "வெளிவேஷம்"! நாங்களுக்கு

எதற்கு??? அவைகளை களைந்தெறிந்து விட்டு,

"தூய வெண்மையாகுங்க-

ள்"!!!

இது எம் அன்னையின், அன்பின் ஆணையாகும்!

உடனே சிரமேற் கொண்டோர்கள் இங்கு காண் உங்கள்

"குழந்தைஸ்வபாவம்" பளிச்சிட்டது!



உ

அதை அப்படியே ஏற்றுக் கொண்டீர்கள்.
ஆஸ்ரம “விவகாரங்களில்” கூட தாங்கள், இருந்தும் “இல்லா தவராகவே”, இருந்தீர்கள்.
ஆனால் எம் அன்னையாகிய, ஸ்ரீமாதாஜீயோ, “இல் வாமலேயே இருப்புடையவராகவே”, விளங்கிறீர்கள் (எம்பப்பா! இதுபோதுமா? இன்னமும் ஸ்பஷ்டமாக விளக்க வேண்டுமோ என்றேன்)
(போதும் ஐயனே, போதும். மேலும் விளக்கம் வேண்டாம் என்றார்கள் எம் ஸ்ரீபப்பா ஜீ.)

தம் கஷ்டங்களை காட்டிக் கொள்ளாமலேயே, சிரித்து சிரித்து, “சீராக்கிவிடுவார்”, எம் ஸ்ரீபப்பாஜீ.
ஆனால் மாதாஜீயோ எத்தனை கஷ்ட நஷ்டங்கள், பலமாக தாக்கிடினும், அயராமல், சோராமல், மயங்காமல், கலங்காமல், நம் “குழந்தைகளுக்கு”, பப்பாவுக்கு தெரியாமலேயே, (ஆனால் அவர் அறியாத தொன்றில்லை) “உணவும்”, “உடையும்”, சில உடைமைகளையும் தந்து, ரக்ஷித்த எம் ஸ்ரீமஹாலக்ஷ்மியான, “அன்னபூர்ணேஷ்வரியை”, வாக்காலோ, வரிவடிவாலோ, சொல்ல இயலாது.



ஒரு தாய் கோழியானது, தம் குஞ்சுகளை
தம் "இறகுகளாலேயே"
வைத்து, பாதுகாப்பது போல், தம் ஆஸ்ரம
அன்பர்களையும் வெளியூர் அன்பர்
களையும், தம் "உதிரம்" (சக்தியை)
கொடுத்து பாதுகாத்தார்கள். ------

இந்த விதம் யாம், சொல்லிக் கொண்டிருக்கும் போதே
எம்மையும் அறியாமல், கண்ணருவி கொட்டுகிறது போலும்!
இதைக் கண்ணுற்ற எம் பப்பாவும் எம் மாதாஜியும் தங்கள் வஸ்திரத்தால்
கண்ணீரைத் துடைத்துக்கொண்டே ------

------ ஏண்டா கொழந்தே! நீயே இப்படி யானால்???
நாங்கள் இருவரும் என்றவோம்???? என உருகினர் இருவரும்.
வேடையும் பேறவையும் காணும் எடுத்தய்யன் இடன் (காரணன்)
கருணையால், பழைய நிலைக்கு வந்து விட்டோம்.

"அது ஓர் மாயாகார்யம்!"

கேளுங்கள் எம் அருமை ஸ்ரீ பப்பாஜீ! பிரமாணமான
உண்மை என்னவென்றால்? சுக்கில, சுரோணிதம்,

(உப்பு மண்ணும் & உவர் ஜலமும்)

இணைந்து பிசைந்து, உருவாகி வந்த இந்த உடலுக்கு,
"மேல் கோட்" ஓர் சட்டையாகும். இங்கு
ஆண் பெண் வித்தியாசமில்லை. இதைப்போல் கோடானு
கோடி சட்டைகள் மாற்றி மாற்றி போட்டுவந்து விட்டோமே!
சட்டை போதும் என, சலிப்பு தட்ட வில்லையா?????



உ

நம் வினையின்படி, இறைவன் கொடுத்த சட்டைக்கு மேல், இன்னொரு சட்டையா???

என உண்மையின் நிலையில், கேள்வி வந்து அது நிறைவானால்,

"வேறு சட்டை" யென்ற "துணி" தேவையில்லை!

இப்படி வெறுப்பில்லாமல், நிறை நிலையுடன் போதும் என விடுவதே, "அவதூதநிலையாகும்"

இங்கும் ஓர் உண்மை :– நாட்டில் மக்கள் மத்தியில், சஞ்சாரம் செய்யும் நிலையில், (வரையில்) தான் "கௌபீனம்" என்ற ஓர் சிறிய வஸ்திரம் தேவைப்படுகிறது. ஆனால் அதுவும்?

காட்டில் மிருகங்கள், பறவைகள் மத்தியில் சஞ்சாரம் செய்யும் நிலையில், அதுவும் தேவையில்லை!

இதை ஸ்ரீமஹான்கள் "திகம்பரர்" (ன்) என சொல்வார்கள்.

இதன் பொருள், திக்குகளையே ஆடையாக உடையவன், எனப் பொருள்படும். திக்குகள் எப்படி ஆடையாக அமையும் என கேள்வி வரலாம்? அஷ்ட திக்கு பாலகர்கள் என்று, எட்டு தேவர்களை சொல்வதுண்டு. இவர்கள் எண்வரும்; "நாம் இறந்து"!



# "தவ்வளில் கலந்து" "ஞானியர்களுக்கே!"

பொருந்துமேயன்றி, ஏனையோருக்குப் பொருந்தாது, என்பதும் ஸ்ரீ மஹான்களின் அனுபவ வசனமாகும். இதுவும் எப்படி பொருந்தும் என்றால்?

இந்த பரிபூரண ஞானிகளின் தூலமானது, பஞ்சீகிரணம் செய்யப்பட்டதானாலும், (பஞ்சபூதங்களால் ஆனது) வெளியுலக, அனைத்து மனம் படைத்த மனிதர்களும் விகாரமான, வக்ர குண தோஷம், உடையவர்களே! இவர்கள் மத்தியில், இந்த ஞானிகள் தூலசஞ்சாரம், செய்யும் போது, அத்தூலங்களை பழுது படாமல், பழுது இல்லாமல், பாது காக்க வேண்டியது, இந்த ஈஸ்வரின் கடமையாகும். அந்த ஈஸ்வரும், தம்முடைய மாயாகார்யத்தினால்?

## "ஞானிகளின் அங்கங்கள் மறைபடும்!"

அல்லது

## "ஞானிகளின் அங்கங்கள் பார்ப்பவர்களுக்கு, மட்டும் மறைக்கப்படும்!

இது இந்த உதவாக்கரை பைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும். இது இறை கிருபையும், பர கருணையும், இணைந்த ஓர் சுக அனுபவமாகும்!



இதைகிந்த உதவாக்கரை வைத்தியம்,
எப்படி அனுபவித்தது என்றால்?
இவ்வனுபவம் "காட்டில்" அல்ல,
இவ்வனுபவம் "நாட்டில்தான்.
"திருஅண்ணாமலையில்" எனச் சொல்லும்,
ஞானபூமியில், நல்லவன் பாளையம் என்ற இடத்தில்
சிவநாவம் இருக்க, எமதண்ணல் அனுமதி தந்தான்.
அங்கு இவ்வைத்தியம், தங்கிய ஓர் அறை நீளஅகலம்
கூடியதாகும். ஐந்து ஆண்டுகள் அங்கு இருந்த சமயம்,
அவன் அருளால் அவன் தாள் வணங்கி!!!
என்ற நிலையில், "ஓராண்டுகாலம்"!
"சுத்த அவதூத நிலையில்"!!! (பிறந்த குழந்தை நிலை)
பிரம்மானந்தத்தில் லயித்து சுகானந்தமாக இருந்தது!!
அந்த ஓராண்டு காலமும், வழக்கம் போல, அன்பர்கள்
(ஆண், பெண், குழந்தைகள், முதியவர், கற்றவர், கல்லாதவர்)
அனைவரும் வருவர். ஸத்ஸங்கமும் இருவேளையுண்டு.
பஜனை நாமசங்கீர்த்தனை எல்லாம் உண்டு. எல்லோரும்
"சகஜமாகவே" பேசிபழகுவார்களே தவிர
எந்த குணதோஷங்களும் எவரிடமும் இல்லவே இல்லை.
விஷேசமாக பிரசாத விநியோகமும் உண்டு!



இங்கு தான், அந்த அஷ்ட திக்கு பாலகர்களின், "மாயா" காரியம், எந்தகையது என உணர்ந்தோம். அந்நிலையில், அந்தால அங்கங்கள், வரும் அனைத்து அன்பர்களுக்கும், "எப்படி மறைக்கப்பட்டன!" என உணர்ந்தோம்.

ஸ்ரீ பாபாஜீ:— அதி அபூர்வமான செயல்தான். ஓர் சிறிய சந்தேகம்? எம் அன்பான, ஸந்ஸித் ஆனந்தா, ஓர் சந்நியாசி! நீயோ ஓர் ஸாது!! இங்கு "அவனை நீ பற்றினையா?" அல்லது "உன்னை அவன்" பற்றினனா?

பைத்தியம்:— (பலமாக சிரித்து) ஹே பிரபோ! இங்கு களங்கம், சந்தேகம், அஹங்காரம், ஆதிக்கம், இருந்தால்தானே "பேதம்" தோற்றும்! அங்கு "ஈஸ்வரப்ரேமை ஒன்று" மட்டும் இருந்தால், அங்கு "அன்பு" ஒன்று தானே, இருக்க முடியும்? இருக்க வேண்டும்.

ஸ்ரீ மாதாஜீ:— அது எங்களுக்கும் தெரியும். இங்கு உங்கள் இருவரிடமும், "அறிமுகம்" எப்படியானது?

பைத்தியம்:- ஐயா பப்பா! அம்மா மாதாஜீ! எமதய்யன் (திருடன்) கண்ணன் கருணையால், ஆனந்தாஸ்ரமம் என்றால் என்ன, என உணர்ந்தோம். பெரும்பாலும் யாம்



உ

போதாத இடம் இல்லைதான். ஆனால் இங்கு நடைபெறும், மந்திர பூர்வமான,

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்!" என்ற ஓர் "தாரகநாமம்"!

அதாவது மஹாமந்திரம், உலகில் வேறு எங்குமே இல்லவே இல்லை. அது சமயம் எம் உணர்வு, எப்படி ஆயிற்று என்றால்?

"மஹாவாக்கியமாகவும்" "மஹாமந்திரமாக"! உச்சரிக்கப்படுகிறதே இதைச் சற்று கவனிக்கலாம், ஜெயந்தோம். அதன் "ஜாப்பும்"! "மெய் அன்பர்களின், உண்மையான ரக்ஷமும், எம் ஞானக்குழந்தையாயும், உங்கள் செல்வனுமும், அமைந்த எம் ஸத்சித் ஆனந்தாவின், "கனிவும் பணிவும்"! நிறைந்த வாக்கு. இங்கு எம்மை திரும்பத் திரும்ப வரவழைத்து விட்டது!

ஸ்ரீபப்பாஜீ:— அப்படி என்ன, எம் குழந்தையிடம், பணிவும் கனிவும் நீ கண்டாய்? அதை ஏதாவது உதாரணத்துடன் விளக்கமுடியுமா?

வைத்தியம்:— பப்பாஜீ! இந்த ஏழையை சோதிக்கிறீர்களா? ஒன்றல்ல, ஓராயிரம் உண்டு. எம் கண்மணியான, ஸத்சித்ஆனந்தாவிடம். அதில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். கேளுங்கள்.



உ

வைத்தியம்:- ஓர்சமயம், எம் அன்பர்கள் சிவர், எம் அனுமதியுடன், இந்த ஆனந்தாஸ்ரமம் வந்து, சிலதினங்கள் தங்கி, பின் விடைபெறும் போது, எம் குழந்தையான ஸத் ஸித் ஆனந்தாவிடம் வந்தார்களாம். அது சமயம், எம் அன்பர்களிடம், எம் ஸத் ஸித் ஆனந்தா, சொன்னதாவது? உங்கள் ஸ்வாமிஜீ உங்களை எப்படி வைத்திருக்கிறார்? எப்படி பழகுவார்? எப்படி அழைப்பார்? உங்கள் அணுகுமுறை என்ன?

அன்பர்கள்:- ஸ்வாமிஜீ! எங்கள் ஸ்வாமிஜீயான, எங்கள் **அப்பா!** "எங்கள் அனைவரையும், "**குழந்தைகளாக்**"! பாவனை செய்வாரே தவிர, மாணவர்களாக **சிஷ்யர்களாக**) பாவனை செய்வதில்லை!

ஸ்ரீ ஸ்வாமிஜீ:- அப்படியானால், உங்கள் அப்பாவிடம், ஓர் விண்ணப்பம் செய்ய வேண்டும்; என சொல்லும் போதே, எம் குழந்தையான, ஸத் ஸித் ஆனந்தா கண்களில் தண்ணீர் கரைபுரண்டு, ஓடிய நிலையில், இங்கும் "**ஓர் குழந்தை**"! இருக்கிறது, என சொல்லுங்கள், அந்த அன்புத் தந்தையின் அன்புக்காக **ஏங்கிக் கொண்டு**"! காத்து இருக்கிறது, என சொன்னதாம் ஸத் ஸித் ஆனந்தா!



வைத்தியம்:—
ஓம் அன்பின் சொரூபமான மாதாஜீ!
எம் அறிவின் சொரூபமான பப்பாஜீ!
எந்த ஒரு "சந்நியாசியும்"!
அவர்கள் ஏற்றுக் கொண்ட, சந்நியாச விரத
கொள்கையின்படி, வணங்கமாட்டார்கள், தலையசைப்பதோடு
சரி, காரணம். விரதபங்கம் ஏற்படும், எனக்கேள்விப்பட்டதுண்டு.
ஆனாலும் சிலர், நிலைகண்டு, வணங்கவும் செய்கிறார்கள்.
ஆனால் எம் ஸத் ஸித் ஆனந்தாவோ, நம்மை ஓர் குழந்தையாக்கி
"அப்பா" எனக்கசிந்து உருகியது! உருகிக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீமாதாஜீ:— ஓம் அருமை குழந்தையான பாபா! எம்
நவசீவனான சுகா! ஓர் முக்கியமான கேள்வி. நீ
ஆனந்தாஸ்ரமத்தில், வரும் சமய மெல்லாம்,
உனக்கு "ஆரத்தி" யெடுக்க, அனுமதி வழங்கப்
படுகிறது. அதுசமயம், அவதாரத்தியில் நான்,
அக்காரியம் செய்கிறேன்.
அது மிக மிக மிக, "அழகு", "ஆச்சர்யம்"!
"ஆனந்தம்" (அது பிரணவமாகவே சூழ்வதால்)
அதில் எம் கேள்வி என்னவென்றால்? அவ்வாரத்தியை,
உன் ஸ்ரீபப்பாஜீயின் முன்பே ஆரம்பிக்கிறாய்!

அப்போ வைத்தியம் இடைமறித்து கேட்டது:— ஓ ஓ ஓ
அவர் "எம்பப்பாஜீ" என்றால். உங்கள் "பப்பாஜீ"
இல்லையா? இங்கு "நம்பப்பாஜீ" என ஏன்



நாங்கள் கூப்பிடவில்லே?
ஸ்ரீபப்பாஜீ:- (கடகடகடகடகடகட வென சிரித்துக் கொண்டே) நல்ல கேள்வி கேட்டு அவளை மடக்கி விட்டாய் பாபா! அவளை யாருமே, பெரும்பாலும், எதிர்கேள்வி கேட்காமலேயே, இருந்தார்கள். ஆனால் இன்று நீ கேட்டது, எமக்கு பரமதிருப்தி!

ஸ்ரீமாதாஜீ:- தப்புதான்! தப்புதான்! எம்மை மன்னித்து விடு. (அப்பைத்தியம் இடைமறித்து ஸ்ரீமாதாஜீயின் திருவடிகளில், பணிந்தெழுந்து, இப்பெரிய வார்த்தையெல்லாம், வேண்டாம். யார் யாரை மன்னிப்பது என்ற, விவஸ்தையே இல்லையா?)

ஸ்ரீ பப்பாஜீ:- அப்பா பாபா! அவள் ஆதிசக்தியின் அம்ஸம் என, உணர்ந்த தன்மையால் இப்படி பேசுகிறாள். எப்போதுமே, இவள் இப்படித்தான். அன்பும் எப்போ பார்த்தாலும் "வழவழ/வொடவொட" தான். பொண்ணுன்னா அடக்கம் வேணும்?

ஸ்ரீமாதாஜீ:- சித்த பேசாம இருக்கேளா? யாம் வழ வழ வொட வொட தான் போதுமா? ஒரு முக்கியமான கேள்வி கேட்க எண்ணினேம். அது மறந்துடுத்து. ஆ ஆ ஆ இப்ப ஞாபகம் வந்துடுத்து (இப்போது எம் ஸ்ரீ பப்பாஜீ அமைதியானர்)
(ஸ்ரீமாதாஜீ தொடர்ந்தார்கள்) அவ்வாரத்தையை, நம் ஸ்ரீபப்பா முன்பே ஆரம்பிக்கிறாய். அதை ஸ்ரீ பப்பா முன்பே முடிக்கிறாய்! "யாம்" உனக்கு தோற்றவில்லையா? மேலும் சில அன்பர்கள் சொல்லக் கேள்வி.



அதாவது ஸ்ரீ அம்பாள் என்றுமே,
உனக்கு பிடிக்காதாமே! அவயவங்களில்
சென்றுமே, "சிவன்" வணங்குகிறாய்!
அங்கு "அம்பாள்"! றிட்ஷெம் பார்ப்பதில்லை
(மாதாஜியிடம் வேகம் இருந்தது)
இதன் உட்பொருள் என்ன?

எம் ஆனந்தாஸ்ரம, அன்பின் குடில் குழந்தைகளே!
இக்கேள்வி கேட்கும் போது, எம் ஸ்ரீ கிருஷ்ணமாய் மாதாஜீ!
"மாதாஜியாக" இல்லை! பவதாரணி வடிவில்,
"ஸ்ரீ பராசக்தி!" சொரூபமாக காட்சி தந்தாள்
அங்கும் "யாம்" பைத்தியமாக இல்லை!
"யாம் அதுவாகவே" இருந்ததாக,
"பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பாஜியும், எழுதய்யன் (கருடன்) கண்ணனும்,
சொன்னதாக உணர்கிறேன் (காணவில்லை)
"ஓம் யோகமாயா"! என் இந்த வேகம்? சமுத்திரமாகிய
எம்முள் தோன்றிய, உனக்கு இருப்பு ஏது? இயக்கம் ஏது??
"யாம் இன்றி நீ இல்லை"! ஆனால்
"நீ இன்றிலும் யாம் உண்டு"!!
(யாம் பிரம்மானந்த சமுத்திரம். அதில் தோன்றிய உப்பு பதுமை)



உ

ஸ்ரீ அன்னை ஸாந்தியானள் (ஸ்ரீ மாதாஜீ ஆனாள்) அது தன்னை மறைத்துக்கொண்டது (ஓர் பைத்தியமானது)

பைத்தியம்:- ஓ எம் அன்னையே! மாதாஜீ!

"இக்கலிதோஷமானது" "சக்தி"யின் உள்ளேயே "சிவத்தை" "காண்பதாகும்"! ஆனால்?

எம் நிலையோ யுகயுக தர்மப்படி;

"சிவத்துள்ளேயே சக்தியை"! காண்பதல்ல! "உணர்வதாகும்"!

ஆகவே எமக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து, எந்த ஆலயங்களிலும், ஸ்ரீ அம்பாளை நேரடியாக தரிசித்ததில்லை! அதனால் அம்பாள் எமக்கு விரோதமும் இல்லை. அவளை வெறுத்து ஒதுக்குவதும் இல்லை. இதன் ரகஸ்யம் என்னவென்றால்

"அன்பே அன்னை"! "அறிவே தந்தை"!

இதை தங்களைப் போன்ற, ஸ்ரீ மஹான்களின் மூலமாக, அனுபவ நிலையில், உணர்ந்த தன்மையினால், அன்பே வடிவாக இருக்கிறோம்! "அறிவே" எம் போதனை என்ற நிலையில், "சாதனையாக"! வைத்துள்ளோம்!



உ

ஆகவே?

"அன்பே" யாகிய எம் அன்னை எம் "உமை"

"அறிவே" யாகிய எம் தந்தை எம் "உரிமை"

இதை உணருங்கள் எம் ஸ்ரீ மாதாஜீ!

"ஸ்ரீமாதாஜீ" என்றால் எம் அன்பின் சொரூபமான அன்னை!

"ஸ்ரீபப்பாஜீ" என்றால் எம் அறிவு சொரூபமான தந்தை!!

ஸ்ரீபப்பாஜீ :- போதும் ஐயனே பாபா! போதும் ஐயனே பாபா!! பக்தியின் ஞான அனுபவ விளக்கம், இதுவரை அந்நியில் எவருமே தந்ததில்லை யென்றே உறுதியாக சொல்வோம்.

ஸ்ரீபப்பா ஜீயும்! ஸ்ரீமாதாஜீயும்! இணைந்தே இதை சொன்னார்கள்

குழந்தாய்! சுகதேவா! அறிவான பாபாவே! பணிவான திருவடியே! எங்கள் "கண்ணனின் அம்பல ஸ்வரூபமான ஞானியே!" தாரக நாம மூல

"மந்திர சொரூபமான!"

"ஓம்.ஸ்ரீராம்.ஜெயராம்.ஜெயஜெயராம்!"

(ரவது)

என்பதற்கும் "மஹாவாக்கிய

நான்கு மஹா வாக்கியங்களுக்கிணையான

திய உபதேச ஸ்லோகமான"

"ஸ்ரீராம்.ஜெயராம்.ஜெயஜெயராம்.ஓம்!"



உ

(என்பதற்கும்)

உள்ள ரகஸியார்த்தம் என்ன?

(கேள்வியின் விளக்கம்)

இக்கேள்வியானது ஆனந்தாஸ்ரம

ஆனந்த குழந்தைகளுக்கும்,

அன்பின் குடியின் அன்புமயமான

குழந்தைகளுக்கும்! மற்றும் இதை "ஸ்ரத்தையுடன்"

ஏற்கும், அனைத்து குழந்தைகளுக்கும், ஏற்புடையதாக

இருக்க வேண்டுமென, ஆசி கூறி வாழ்த்துகிறோம் என,

"ஸ்ரீ ஆஞ்சநேயப்பிரபுவின்"! அம்ஸஸ்

வரூபமான "ஸமர்த்தராம்" தாஸரின்,

மறு அவதாரமான "பரம்பூஜ்ய ஸ்ரீ பப்பா

ராம்தாஸரும்!!"

"ஆதிசக்தியின்" அம்ஸஸ்வரூபமான

"முக்தாபாய்" அன்னையின் மறு அவதாரமான

"ஸ்ரீ கிருஷ்ணாபாய் மாதாஜி"!

அவர்களும் இணைந்து, எம் ஞானக் குழந்தையான,

"ஸத் ஸித் ஆனந்தாவின்"!

அருளாசியும் இணைந்து, பணிவோடு ஏற்றுக் கொண்டு,



"காலாதீத அநந்த ஒன்று"
காலத்தை ஏற்படுத்திக்கொண்டு,
"ஞானப்புலம்பலாக" புலம்புகிறது
"ஓம் அன்பு" மயமான "ஆனந்த" குழந்தைதானோ

பலபல கல்ப கோடியில், வாழ்ந்த ஸ்ரீ மஹாத்மாக்களின்
திருவாக்கும், நம் பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பா ராம் தாஸ் அவர்
களும், ஸ்ரீ அன்னை கிருஷ்ணபாய் மாதாஜீ அவர்களும்,
அனைத்தும் ஒன்றாக இணைந்து, தம் அனுபவ ஸ்வய ஞானத்
தை ஒலிக்கிறது! உணர்த்துகிறது! உணர்ந்து அது என ஆகுக!
வேதம் நான்கு என்றும், அவற்றின் மஹா வாக்கியங்
கள் நான்கு என்றும், அனுபவ ஞானிகள் உணர்த்துவர்.
அவையாவன?

1. ரிக்வேதம் இதன் மஹா வாக்கியம் "ப்ரக்ஞானம் பிரம்மம்"!
2. யஜுர்வேதம் ,, ,, ,, "அஹம் பிரம்மாஸ்மி"!
3. ஸாமவேதம் ,, ,, ,, "தத், த்வம், அஸி"!
4. அதர்வண வேதம் ,, ,, ,, அயமாத்மா பிரம்மம்!

என நான்கு வேதங்களும், நான்கு மஹா வாக்கியங்களாக
விளங்கும் போது, அவைகள் வேதாந்தம் (வேத சூஸ்திர
ரகஸ்யம்) என ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.
வேதம் கற்றவன் பிராமணன் எனப்படுவான்.
வேதாந்தம் உணர்ந்தவன் ஞானி எனப்படுவான்.



வேதம் கற்றால், உலகியலில் உயர்ந்த பிறவியும், தெய்வீக நிலையில் உயர்ந்த பிறவியும், அதனினும் மேலான பந்த முக்தியும், அவஸ்யம் கிடைக்கும்!

வேதாந்தம் உணர்ந்தால், பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தி அடையலாம்.

இந்த நான்கு மஹா வாக்கியங்களும், முறையே உபதேச க்ரமமாக சொல்வது என்றால்?

ஓர் ஸத்குரு, பக்குவமான மாணவனுக்கு, முதலாவது தத்த்வம் அஸி என உரைக்கிறார். இதன் பொருள் "அதுவாக நீ இருக்கிறாய்" எனச் சொல்கிறார்.

அது நாம் எப்படி ஆக முடியும்? நாம் அல்ப ஜீவன் தானே? என திகைக்கிறான். அப்படி திகைப்பவனை, ஊக்குவிக்கும் நிமித்தம், இரண்டாவது அஹம் பிரம்மாஸ்மி, எனத் தியானம் செய் என்கிறார். இதன் பொருள், "நாம் அது. அதுவே நாம்"! என, தைலதாரை போல் தியானம் செய்ய வேண்டும் என்கிறார்.

குருதேவா! இதன் அப்யாசம் எப்படி இருக்க வேண்டுமென கேட்கிறான். இதன் மறுமொழியாக, மூன்றாவது நிலையாக, ப்ரக்ஞானம் பிரம்மம் என்றார் ஸ்ரீ குருதேவர். இதன் உட்பொருள் என்னென்ன வினவுகிறான். அவரும் "உடல் உலகநாம



உ

"ஞே"! பிரக்ஞையோடு இராதே என்றும்;
முதலில் சாட்சி நிலையாகிய, தெய்வம்
பிரக்ஞையோடு இரு என்றும், பின்
உன் அனுபவ முதிர்ச்சியினால், எல்லாம்
ஒன்றே என்ற, சர்வசாட்சி நிலையில், ஸ்திரப்பட்டு
"ஆத்மப்" பிரக்ஞையோடு. "பரமாத்மப்" ஸ்ரீ குருதேவர்
பிரக்ஞையோடு இரு, என அனுபவம் சூட்டி வைக்கிறார்!
அப்பக்குவ ஆன்மாவும், முன் கூறிய மூன்று மஹா
வாக்கியங்களையும், கிரமேண கொண்டு, சிரத்தையுடன்
அப்யாசம் செய்து, அப்யாசம் செய்து, நிறை நிலையில்,
"பூர்ணத்வம்!" பெறும் போது! அவன் நிலை
கண்டு, "நாமும் அவனும்" ஒன்றான
தன்மையினால், ஸ்வய அனுபவ நிலையினால், அவனை
"ஞான சபைக்கு!" உவந்தவனாகிவிட்டாய்
என்ற பூரணத்தினால், நான்காவது நிலை மஹா வாக்கியமாகிய
அயமாத்மா பிரம்மம் என, அவனையும் ஆக்கி தானும்
ஆகி விடுகிறார். இதன் முடிவாக அந்த உத்தம சிஷ்யன் சொல்வதே
"யாம் (நான் நாம்) அதுவாகவே (நிலையாகிய) இருக்கிறோம்!"
என்பதாகும். இந்த விதமாக, இந்த நான்கு மஹாவாக்கி



"உ"

யங்களும் இயங்குவதால், இவைகள்

"ஞானிகளுக்கே" உரியதாகும்

இந்த நான்கு மஹாவாக்கியங்களும்,

"துறவிகளுக்கு" உரியதேயன்றி,

சம்ஸாரிகளுக்கு (குடும்பிகளுக்கு) இல்லையென்பதே,

ஸ்ரீமஹான்களின் அநுபவவாசகமாக இருக்கிறது.

"ஆகவே?"

இந்த நான்கு மஹாவாக்கியங்களுக்கு இணையாக,

சம்ஸாரிகளாகிய குடும்பிகளுக்கும் "ஒரே ஒர்"

மஹாவாக்யம் மட்டும், கொடுத்தார்கள் ஸ்ரீமஹான்கள்.

இதில் ஒன்றை கவனிக்கவும்!!!

"ஓம்" என்றால் பிரணவம் எனப் பொருள்படும்.

இதுவே மூலப்பிரகிருதியாகிய, யோகமாயாவாகும்.

இதைப் பற்றியே மேலே மேலே சென்றால், யோகமாயா

வையும் தாண்டிய நிலையில், நாம் அது அதுவே நாம் எனஆக

வாம்.

இது துறவிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் உரியதாகும்!

"ஸ்ரீராம்" இதைப் போலவே

என்றால், பிரணவத்திற்கு என்ன தன்மை

உண்டோ அதைகொடுக்கும் "அடிப்படையைக்"

கொண்டதாகும், இந்த ஸ்ரீராம்! ஆனால் பிரணவம் என இது ஆகாது.

இது ஸம்ஸாரிகளாகிய குடும்பிகளுக்கு உரியதாகும்!



இதை அனுசரித்தே, துறவிகளுக்கும், சந்நியாசிகளுக்கும் பிரணவத்தையே உபதேசிக்கிறார்கள். அதைப் போலவே, சம்சாரிகளாகிய குடும்பிகளுக்கு, ஸ்ரீராம் என உபதேசிக்கிறார்கள்.

உபநிஷத் என்ன சொல்கிறது என்றால், "க்ஷரம்", "அக்ஷரம்" (வரிவடிவம்! ஒலிவடிவம்) ஆகிய இரண்டும், ஓர் நூல் என்ற, "ஓம்ன்றபிரணவத்தில்"! கோர்க்கப் பட்ட விதவிதமான, "மணிகள்"! எனச் சொல்கின்றனர்!

"ஐந்தாவதாக" சொல்லும் மஹாவாக்கியம், "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்"! ஆகும். இதே மஹாவாக்கியத்தை, பிரணவத்தை முன்னால் போட்டு, "ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்"! என உச்சாரணம் பண்ணி ஜபித்தாலோ, உபதேசித்தாலோ, அவஸ்யம் அது "மந்திரபலத்தைத்தான்" கொடுக்குமேயல்லாது, மஹாவாக்கியபலனைகாது!

மந்திரபலம், ஆற்றல் மிக்க சக்தியையும், ஜனனமரணத்தையும் கொடுக்கும்!
மஹாவாக்கியபலம், ஆத்மசக்தியையும், ஜீவன் முக்தியையும் கொடுக்கும்.



உ

நம் வேத சாஸ்திரங்களில், குறிப்பிடப்பட்ட மந்திரங்கள் ஏழு கோடி என்றும், சிலர் பத்து கோடியென்றும் சொல்கிறார்கள். அந்த அனைத்து மந்திரங்களும் "பிரவர்த்திக்கு" உரியனதைதான் காட்டுகிறதே தவிர, "நிவர்த்தியை" எதுவும் காட்டி குறிக்கவும் இல்லை.

மேலும் அனைத்து மந்திரங்களும் "பிரணவத்தை" "அடிப்படையாக" கொண்டதவை.

அனைத்து மந்திரங்களும், பிரணவத்தை முன்னால் வைக்கவில்லையென்றால், உச்சரிக்கும் அனைத்து மந்திரங்களும் "உயிர் அற்றதாகிவிடும்". இதுவே பிரமாண உண்மையாகும்.

இதைப்போலவே "ஸ்ரீ" என்ற ஓர் உயிர் எழுத்து இல்லையானால் "ஸௌக்கமும்" அதை அடுத்த "தெய்வீகமும்" பயனற்றதாகிவிடும்.



இந்த ஸ்ரீ ஐ ஆதாரமாக வைத்தே,
பெண் இனங்களுக்கு "ஸ்ரீமதி" என்றும்,
ஆண் இனங்களுக்கு "ஸ்ரீமான்" என்றும்
வழங்கப்பட்டு வருகிறது!
இதை அடிப்படையாக கொண்டே "ஸ்ரீகள்" என்பதே
மருவி ஸ்திரீகள் என ஆயிற்று!

"ஸ்ரீ" என்றால் மஹாலக்ஷ்மியை குறிக்கும்!
,, பெண் தெய்வங்கள் அனைத்தையும் குறிக்கும்!
,, சக்தி சொரூபங்கள் அனைத்தையும் குறிக்கும்!
ஆற்றலைக் கொடுப்பது ஸ்ரீ ஆகும்

இங்கு "ஸ்ரீராம்" என்றால் மங்களம் சாத்தியமாகும்!
நினைத்த காரியம் முடிவுறும்! துக்கங்கள் மறையும்!
பேர் புகழ் பட்டம் பதவியோடு வாழலாம்! எதிரிகள்
மறைந்துவிடுவர்! (அழியார்) பொன் பொருளோடு,
பூவோடு, பொட்டோடு சுமங்கலியாய் வாழலாம்!
பொதுவாக சொல்வது என்றால் "பொருளைக்"
(இருளைக்) கொடுப்பது, இந்த ஸ்ரீ என்னும் சௌபாக்கிய
வாக்கியமாகும். இங்கு ஸ்ரீ என்பது பொன், பொருள்
போகம் என்னும், மோஹ வஸ்துக்களாகும். "ராம்" என்பது
"சாக்ஷி" பாவனையாகும்! இறை நாம உணர்வோடு அப்
பொருளை எடுத்தால், தோஷம் இல்லை. மோஹத்தோடு எடுத்தால் தோஷம்.



"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்!" என்றும் "மஹாவாக்கியமாகும்!"

1 ஸ்ரீராம் :– ஓர் ஜீவனின் போக போக்கியங்களை, அவன் புண்ணிய பாப வினைக்கேற்ப, அவன் அளவு அறிந்து கொடுக்கும், "போக வாக்கியமாகும்!"

(இது இறைநாமாவே)

2. ஜெயராம் :– அப்போகங்களில், இப்போகங்களை அனுபவித்தது போதும். இவை அனைத்தும், வினைப் பெருக்கமே என உணர்த்தி, காண்பன கேட்பன, சுவைப்பன, நுகர்வன, தொடுவன (இது குறிப்பாக "துரியாகும்")

ஆகிய இவை ஐந்திலும், பூரண திருப்தியை கொடுத்து (வெறுப்பை கொடுத்தல்)

"முதல் வெற்றியை தரும்"



# "மஹாவாக்கியமாகும்"!

3. ஜெய ஜெய ராம்:— பூரண நிறைவை கொடுத்த இந்த வெற்றியானது, "லௌகீக" வெற்றியாகும். மேலும் தெய்வீகத்திலும், நாம் வெற்றி பெற வேண்டும். இங்கு "ஸத்குரு" வாக்கிய சிரத்தையை, நாம் பின்பற்றும் போது, உலகியலில் பூரண திருப்தியுற்றால், உலகம் நம்முடையதாகிவிடும். உலகம் நம்முடையதாகும் போது, "ஸ்ரீபகவானும் நாமும்" ஒன்று என்ற நிலை, அவஸ்யம் பெற முடியும். இதன் ஸாதனை எல்லாம் நீயே! எல்லாம் உன்னாலே! எல்லாம் உன்னுடையதே என்ற, "ஸ்வய அனுபவம்"! இயல்பாக கிடைக்கும். இங்கு எந்த கோர குணங்களும், இல்லாது ஒழியும். ஸத்வகுணம் ஒன்றே நிலவும். குடும்பமோ, தொழிலோ, உறவோ மனதை பிடிக்காத நிலையில் தெய்வீக "பேரானந்தம்" பெறும் நிலையில், தெய்வம் நாம் என்ற உணர்விறல் "உலகக் கலக்கமும்"! "தெய்வமயக்கமும்" அழிந்து இரண்டு வெற்றியை பெறுவதே, "மாபெரும்



# (இரண்டு) "வெற்றி மஹாவாக்கியமாகும்"!!!

4. "ஓம்": — ஸ்ரீராமம் என்ற போக போக்கியங்களை, அந்த ஸ்ரீபகவானே ஏற்றுக் கொண்டு, உன்னை அவன் செயலுக்கு உடந்தையாக்கி, இனி விளையாடியது போதும், என நிறைவைக் கொடுத்து, "தன்னிலைக்கு" ↑ உன்னை ஆளாக்கி, உலக "கலக்கத்தை" போக்கி, தெய்வம் என்றால், மஹிமை பிரபாவம் (ஆற்றல் மிக்க சக்தி) ரூபலாவண்யம் (காட்சியால் அழகு, வசீகரம், ஆடம்பரம், சுவை) இவைகளின் போதை "மயக்கத்தையும்" நீக்கிய தன்மையினால், மூன்றாவது நிலையாகிய (வெற்றியாகிய) "பரசொரூபஸ்திதியை" சுட்டிக்காட்டுவது, நிர்க்குண, நிராஹார, நிர்விகார, நிர்பேத, நிர்சேத, நிச்சலன, நிராஹங்கார, நிஷ்சலித சொரூபமான "அவ்யக்தம்" என்றும், தத்துவ,



"மூலப்பிரகிருதி" என்றும், "மூலமாயை" என்றும், சொல்லும் ஒரே சூன்ய சொரூபமான, "யோகமாயாவின்" அம்ச ஸ்வரூபமான, "ஓம்கார பிரணவ நாதம்!" முடிவற்ற சொல்ல முடியாத, விளக்க முடியாத, நிலையை அடைவதே ஜென்றுவது வெற்றியாகும்.

இதை கவனிக்கவும் :- தமிழ் எழுத்தானது, "அ" என ஆரம்பித்து "ஔ" வில் முடிவடைகிறது! இங்கு "அ" வுக்கு முன்பாக "ஔ" வைப் போட முடியுமா? முடியாது! அதைப் போலவே ஆங்கில எழுத்தும் "A" வில் ஆரம்பமாகி "Z" என முடிவடைகிறது. இங்கும் "A" க்கு முன்பாக "Z" ஐ போட முடியுமா? முடியாது! அதைப் போலவே "க்ஷர, அக்ஷர" அனைத்து மணிகளும் (எழுத்தும்) ஓம் என்ற பிரணவ நூலில், கோர்க்கப்பட்டிருக்க "நூல்" எடுத்து முன்னால் வைத்துவிட்டால் "மணி"களை எங்கே கோர்ப்பது?



உ

நூல் இல்லாமல் மணிகள் நிற்காது. மணிகள் இல்லையானால் நூல் தேவையில்லை. "மணிகள்" என்ற, வாக்கிய விளக்கமான "உலகம்" தேவையென்றால், அதை எடுத்துக் கோர்க்கும், பிரணவமும் அவசியம் தேவை. இவை இரண்டுக்கும், "ஆதாரமாயும்," "ஆதரவாயும்," "ஆகாரமாயும்" அமைந்ததே, காலாதீத பரசொரூபம். அப்பர சொரூபம் செயல்படாத தன்மையினால், மேலே கூறிய அவ்விரண்டையும் "தேவ, தெய்வ, ஜீவ, சொரூபங்களாகவும்" இவைகள் விளையாடுவதற்கு "உடல், உலக, பொருள்களையும்" வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது. இவ்விளையாட்டு வேண்டுமென்றால் "பிரவர்த்திமார்க்கத்திற்கு" உரியதான



"ஓம், ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்" என்ற பதமுக்திக்குரிய தாரக நாம மந்திரத்தை ஸ்மரிக்கலாம்.

ப்ரவர்த்தி மார்க்கம் போதும், கோடானுகோடி ஜன்மா எடுத்து எடுத்து அலுத்து விட்டோம் என்ற பூரண நிறைவு தோன்றினால், "நிவர்த்தி" மார்க்கத்திற்குரிய தான, ஐந்தாவது சம்ஸார குடும்பிகருக்கு உரிய, மஹா வாக்கியமான, மஹா ரகஸ்ய

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்"

"ஓம்"!!!

என்பதை ஸ்மரிக்கலாம்.

பதமுக்தியும் பிறவியும் வேண்டுமானால் மஹாமந்திரம்!

பிறவாநிலையாகிய ஜீவன்முக்தி வேண்டுமானால் "மஹாவாக்கியம்"!!



உ

"ஸத்குரு கிருபையில்"!

"தொடுவதை தொடவும்"!

"விடுவதை விடவும்"!!

ஸ்ரீ பப்பாஜீயும், ஸ்ரீ மாதாஜீயும் இணைந்தே சொன்னார்கள் :— ஓம் அருமையான "சுக சொரூபமான பாபாவே"! உன் வாக்கு எளிமையானது! உன் வாக்கு மிக மிக இனிமையானது! உன் வாக்கு சுக சொரூபமானது! உன் வாக்கு ஸத்தியமானது!

"நலம் பெறுவாய்! சுகம் பெறுவாய்"!!

என ஆசி கூறிய வாழ்த்தொலி மட்டும் கேட்டது! பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பா ஜீ அவர்களை காணோம்! அதே போல் ஸ்ரீ அன்னை கிருஷ்ணபாய் மாதாஜீ அவர்களையும் காணோம். கண்ணருவி பெருக்கெடுத்து ஓட, மெய்சிலிர்க்க உள்ளம் குழைய ஜீக உருகிய நிலையில், ஏக்க நிலையில் "பப்பாஜீ! மாதாஜீ"!!

என உருகிய நிலையில், அந்த பைத்தியம் அழைத்தது. அங்கு காவிரி நீரோட்டம், ஸ்தம்பித்து நின்று விட்டது! இளந்தென்றலாகிய வாயுவும், ஸ்தம்பித்து நின்றுவிட்டது!



உ

எந்த மரங்களும், அசையாமல் அப்படியே
"சிற்ப சித்திரம் போல்"
அசைவற்று நின்றுவிட்டது. ஆனால்
ஓர் "பரிபூரண அமைதி"
மட்டும் நிலவியது.

ஓர் கம்பீரமான குரல், இருவர் இணைந்த குரல்,
இனிமையிலும் இனிமையான குரல், அதி அதி அதி
"மதுரமான குரல் ஒலித்தது"!
"ஹேபாபா!" உன்னுடைய தரிசனத்தாலும்
உன்னுடன் உரையாடியதாலும், "அன்பும்,
ஆனந்தமும்!" இணைந்த ஓர் ஸத் சங்கம்
நிறைவு பெற்றது! உன்னுடைய ஸ்வய அனுபவ
நிலையில், உடலால் "பணிவும்!"
உள்ளத்தில் "கனிவும், கருணையும்!"
வாக்கில் "இறை உணர்வு" கலந்த
"இனிமையும்!" இதமும் மிதமும்,



"ஒன்றாந்து" கலந்து வந்தால், அதுவே "பக்தியும்", "ஜீவன் முக்தியும்" ஆகும் என பிரமாணமாக சொல்கிறோம்! உன் வாக்குப்படி, எந்தெந்த "பக்குவ ஆன்மாக்கள்" அவரவர் நிலைக்குத் தக்கபடி "ஸ்ரீ, மனதில்" நேரப மேலே கூறிய மஹாமந்திரமோ, மஹாவாக்கியமோ, எதை ஏற்றுக் கொள்கிறார்களோ, அந்தந்த நிலையில், அனுபவம் பெற்று, அது "மந்திரமால்" அவன் ஆவர்! (உயர்பிறவி! உயர்பதவி!) ஜீவன் முக்தி இங்கு!

அது "மஹாவாக்கியமால்" அதுவே நாம், நாமே அது என ஆவர். இது ஜீவன் முக்தி (என்ற பிறவா நிலையாகும்.)



உ

எங்கள் செல்வமே! பாபா!

நீ "ஜகத்திற்காக" வரவில்லை!!!

நீ "பரநிலைக்காக" வந்தவன்!!

நீ வந்த காரியம் "பூரணத்வம்!" பெற எங்கள் ஆசி உரித்தாகுக!

என அமுத குரல் வந்ததை, உணர்ந்து, ஸ்ரீ பப்பாஜீயும், ஸ்ரீ மாதாஜீயும், எங்கே என தேடும் போது!

கடகட கடகட கடகட வென சிரிப்பொலியுடன், ஏன் பாபா? எதை தேடுகிறாய்? யாரை தேடுகிறாய் எங்கே தேடுகிறாய்? நாங்கள் உன்னுள்ளே இருக்க, எப்படி வெளியே தேட முடியும்? எங்கள் செல்வக்குழந்தாய்! பாபா! இதுவரை உன்னோடு உரையாடியதும் நாங்களே! பாபாவும் நாங்களே! கமலக் கண்ணனும் நாங்களே! இவைகளை கேட்ட அந்த வைத்தியமும், கட கடகடகட வென சிரித்துக் கொண்டே "நீங்கள்! நாங்கள்! யாம்" எல்லாம் ஒன்றே! அது "சுத்த சிவமே!" அதுவே யாம்! யாமே அது! அதுவே நீ!

பாபா.



ஸ்ரீமாதாஜீ:- ஓம் அன்பான பாபா:-
ஓர் சிறிய விளக்கம் தேவை! அதாவது
"ராம்", "ஸ்ரீராம்" என்பதிலும்
எது சிரேஷ்டம்? இதை அனேகர் அனேக
விளக்கம் கொடுக்கிறார்கள். ஆனாலும் உன் வாக்கும்,
விளக்கமும், வாக்ஞானம் இவ்வாறு, அனுபவ ஞானமாக
வும், எளிமைக்கும் எளிமையாகவும், மதுரத்திலும்
"அதிமதுரமாக" இருப்பதனால், அவைக
ளுக்கு சுருக்கமான, விளக்கம் தேவை?

வைத்தியம்:- ஓம் அன்னையே! இன்று அந்த எளியேன்,
ஓர் பதுமையாக்கி, ஆட வைத்தும் புலம்ப வைத்துமாகவும்
வேடிக்கை பார்க்கிறீர்கள். பரவாயில்லை. உன்னை பதுமை
"அதனால்" ஒலிபெருக்கியாகவும், செயல்படுகிறது.
ஸ்ரீ துளசிதாஸருக்கு,
ஸ்ரீ வால்மீகியின் அம்சமான, அவருடைய "ஸகா", ஸ்ரீ ஆஞ்சநேயப்ரபு சொன்
னதை, அப்படியே சொல்கிறது.

ஓம் அன்னையே! ராம் என்றால் மந்திரம் ஆகும்!
ராமா என்றால் நாமா ஆகும்! நாமாவை விட, மந்திரத்
திற்குத் தான் வலிமை உண்டு.
"ராமா" என்றால் தசரத புத்திரன், ராமனின் நாமாவாகும்!
"ராம்" என்றால் பிரணவத்தின் அடுத்த நிலை மந்திரமாகும்!



உ

"ராம்", எனச் சொல்லும் போது, அது
சுவாசத்தோடு கலந்து விட வேண்டும்!
மூச்சை உள் இழுக்கும் போது "ராம்" என்று
இழுக்க வேண்டும். மூச்சை வெளியே விடும்
போது அது வெறுமனே போக வேண்டும்! இதுவே ப்ராணாப்பியாசம்.

"ரா" என்றால், உன்னில் கண்டு, உனக்கு தேவையானதை,
உள்ளே இழுக்கும் மந்திரமாகும்.

"ம்" என்றால், உள்ளே சென்றதை, வெளியில் விடாமல் மூடி,
உனக்கு அனுபவத்தை, கொடுக்கும் மந்திரமாகும்.

அம்மா மாதாஜீ. இன்றைய கலியுக மக்கள்,
பொன், பொருள், புகழ், போகம் வசப்பட்ட தன்மையால்,
"ஸ்ரீ"யை, உயர்வாக கருதுகிறார்கள். தனம் என்ற
அப்பொருளானது, ஆத்மஸாதகர்களுக்கு மட்டும்,
"இருள்" போன்றதாகும். உலகியல் மக்களுக்கு,
அத்திருமகள் என்ற லக்ஷ்மி இல்லாமல் வாழ முடியாது,
என ஆகிவிட்டது. அந்த உலக வார்த்தை, நமக்கு வேண்டாம்
இங்கு "ஸ்ரீராம்" என உச்சரிக்கும் போது, போக போக்
கியங்களை, கொடுப்பதாக இருப்பதால், அப்படி ஸ்மரிக்காமல்,



"ஜெயராம்!" என்றோ "ஜெய்ராம்!" என்றோ, "ஹேராம்!" என்றோ, "ஹரேராம்!" என்றோ ஸ்மரிக்கலாம்!

ஜெயராம், ஜெய் ராம், இரண்டும் ஒன்றே. அதனால் உலகியல் போக போக்கியங்களை, நிலைகண்டு கொடுத்தும் நிலைகண்டு எடுத்தும், உலக வாஸனைகளை குறைத்து, குறைத்து, முதலாவது "வெற்றியை!" கொடுப்பதாகும்.

ஹேராம் என்றால், "காட்சிக்காக!" ஏக்கம் கொண்டு, அழைக்கும் மந்திரமாகும்!

ஹரேராம் என்றால், நீயே கதி என்றும்; உன்னையல்லால் வேறு கதியில்லை என்றும்; "உருக்கமுடன்!" கதறி அழைக்கும் மந்திரமாகும்!

ஆக அனைத்திலும் "ஹரேராம்!" மந்திரமே சிறந்தது. ஆனால் ஸ்ரீ, உச்சரிக்காமல் "ராம்" என ஒன்று மட்டும், சுவாசத்துடன் கலந்து, ஓடிக்கொண்டிருக்குமானால் நம் கற்பனை இல்லாமலேயே, அனைத்தும் கிரமமாக கிடைக்கும் என்பதே எம் பிரபு ஆஞ்சநேயரின் வாக்காகும்!

பாபா.



"முடிவுரை"!!!

"அன்பு" குடில் குழந்தைகளும்,
"ஆனந்த" ஆஸ்ரம குழந்தைகளும்,
குடில் என்றும், ஆஸ்ரமம் என்றும், சொல்லும் "மண்
பூமியை" மறந்து, கனிவு, பணிவு, கருணை நிறைந்த
"அன்பும்!" இறை குரு உணர்வு கலந்த,
"ஆனந்தம்!" நிறைந்து,
"அன்பு என்றால் பழம்!" என்றும்,
"ஆனந்தம் என்றால் சுவை!" என்றும்,
"அதை சுவைப்பவன் ஞானி!"
ஒருவனே என, உங்கள் அறிவுபூர்வமாக உணர்ந்து
"அடங்கி!" இருந்து, ஆத்மஞானி நாம் என ஆகி,
அதுவே நாம், நாமே அது! என ஆக வாழ்த்தி ஆசி கூறுகிறேன்!

சுபம்! சுபம்!! சுபம்!!!
பாபா.



தர்மம் செய். ஓம் ஸத்தியம் பேசு.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நடைபெறும்"!

"ஸ்ரீராம் ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்"!

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்",

"அகமே எல்லாம்"!

"ஜகம், பரமும், ஜீவர்களும்",

"ஏதும் இல்லை!"

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

எல்லாம் நீயே! எல்லாம் நீயே!! எல்லாம் நீயே!!!
சரீரத்தால் செய்யும், அனைத்து புண்ணியபாபகர்மாக்
கரும் உனக்கே! இச்சரீரம் உனதுகை பதுமையே!
என சர்வார்ப்பணமாக, அனைத்தையும் விட்டுவிட்டு,
"சும்மா சுகமாக"! இருப்பாயாக!



உ

ஆனந்த குழந்தைகளே! "ஸத்குரு" வாக்கிய சிரத்தைக்கு (குருவிடம் பணியும் நிலைக்கு) ஓர் சிறிய விளக்கம் தருகிறேன். அது இப்பைத்தியத்தின், "ஸ்வயஅநுபவம்" ஆகும். கொள்ளுவதும், தள்ளுவதும், உங்களுடைய "விண. மனம்" சம்பந்தப்பட்டதாகும்!

என்றாவது ஓர் நாள், ஸ்ரீ குருதேவர்! ஏ திருவடி என அழைப்பார். அது அவர் முன் வந்து நிற்கும். அப்போது அவர் முகம், இருமையாக இருந்தால், தேன் கலந்த மருந்து தரப் போகிறார், எனப் பொருள்படும். அப்போது அவர் முகம் சற்று கடுகடுப்பாக இருந்தால், கடும் கசப்பும், மருந்து உள்ளே செல்லமுடியாத, குமட்டலும் (வாந்தி செய்யும் நிலை) உள்ள மருந்து தரப் போகிறார், எனப் பொருள்படும். அந்த கசப்பான மருந்து கொடுக்கும் நிலை:- அடே திருவடி! ஏதோ ஓர் தேதியையும் (ஏதோ ஓர் இடத்தையும்) அந்த நாளையும், ஏதோ ஓர் நேரத்தையும், குறிப்பிட்டுச் சொல்லி, அன்று இன்னாரிடம் இப்படி பேசுறையா? என்றோ??? இந்த இடத்தில், இப்படி செய்தாயா? என்றோ??? (ஏதாவது ஒன்று) ஓர் "பிரட்டலான்" ஓர் கேள்வி வரும்?



இந்த இடத்தில் உங்கள் நிலை என்ன?

உங்கள் பதில்:— அப்படி ஒன்றும் நடக்கவில்லையே என்றும். அந்த நபரை பார்க்கவே இல்லையே என்றும், அன்றையாம் வெளியூரில் அல்லவா இருந்தோம் என்றும், இதற்கும் எமக்கும், சம்பந்தமேயில்லை யென்றும், இன்னமும் பல நிலைகளில் "மறுப்பு" வருமேயன்றி "ஒப்புதல்" வாக்கு வரவே வராது! அப்படியே வேறு ஓர் இடத்தில் வேறு ஓர் சம்பவம் நடந்திருந்தாலும், "அவன் (அவள்) பேசினான் (பேசினாள்) யாமும் பேசினோம். செய்தான் (செய்தாள்) யாமும் செய்தோம்" என்றே, "பதில் வாக்கை" கொடுத்து, உன் குருவாக்கை "மறுக்கலாம்!" மேலும் பல விளக்கமும் தரலாம். அது உன் நிலையால், சரியான விளக்கமாகவும் இருக்கலாம். இதுவே இன்றைய "கலியுக தர்மமாகும்!"

இப்பைத்தியம் எப்படி அதை அறிய வந்தது என்றால்???

பைத்தியம்:— குருதேவர் முகுந்தை "இரண்டாருவிரடிகள்" தான், பணிவும் கனிவும், கொண்டு நோக்கும். மறுவிதையே! அது வார்த்தையின் நாடகமாக இருந்தால்; ஐயா! இனி இவ்விதம் பேசாது!



"மன்னிக்கவும்" என உடனே
மன்னிப்பு கேட்டுவிட்டு, இனியும்
இவ்விதம் பேசாமலிருக்க, கிருபை
செய்ய வேணுமென்று, "அன்பாய்"
உருக்க நிலையில் கண்களில் கண்ணீர் ததும்பும். அல்லது
கண்ணீர் ஓடலாம்.
இவ்வார்த்தையை கேட்ட நிலையில், எம் ஸத்குரு கடகட
வென சிரிப்பார்.
இதைப்போலவே?

அது செய்கையின் நாடகமாக இருந்தால், ஐயா!
இனியும் இவ்வாதம் செய்யாது. "மன்னிக்கவும்"
என, உடனே மன்னிப்பு கேட்டுவிட்டு, இனியும் இவ்விதம்
செய்யாமலிருக்க, கிருபை செய்ய வேணுமென்று,
"அன்பாய்" உருக்கநிலையில் கேட்கும் போது,
எம் ஸத்குரு கடகட வென சிரிப்பார்.
"உன் அடக்கம்" உனக்கு நலம் அருளும் என்பார்.
இங்கு ஏதேனும் மறுப்பு வார்த்தை பேசினால் ???

A. அவர் வாக்கை நீ மதிக்கவில்லை!
B. இங்கு எதிர் வார்த்தை நீ பேசுகிறாய்!
C. அவரை மடக்க அடக்க நீ எண்ணுகிறாய்!
D. குருவை மிஞ்சிய சீடனாக நீ இருக்கிறாய்!

"உன்னில்"



A. முன் சம்பவத்தை குறிப்பிடுகிறார்!

B. குருவை மதிக்கிறாயா எனப் பரீட்சை!

C. பணிவு உள்ளதா? அறம் உள்ளதா?

D. அப்படியே ஏற்கும் திறமை உள்ளதா?

அவர் நிலை!

இங்கு உனக்கு சந்தேகமும், மனப் போராட்டமும், ஏற்படலாம்!

"பேசாததையும், செய்யாததையும்!"

"ஆம்" என ஏற்றால், நாம் பேசாததை பேசியதாகவும், செய்யாததைச் செய்ததாகவும் தானே பொருள்படுகிறது. இங்கு அக்குற்றங்களை யாம் எப்படி ஏற்க முடியும்?

ஆனால் இது???

"ஸத்குரு" சந்நிதியில் மட்டுமே பொருந்தும்!

"உலகியலில்" ஸத்குருவின் ஓர்மையுடன், இரண்டொரு விநாடிகள், நீ அடங்கி ஒடுங்கி இருந்தால், வரும் வாக்கின் நிலை கண்டு "அது உன்னை" இயக்கும்.

இந்த உலகியலிலும், நீ அடங்கி இருந்தால், மேலே கூறிய செயலுக்கு நிலை கண்டு, உன்னை ஆட்படுத்தவும், விலக்கவும் அதனால் முடியும்.

அதாவது என்றோ பேசியிருக்கலாம், செய்திருக்கலாம். அதன் "கணக்கு இன்று" முடிவடைகிறது. என தலை வணங்கி ஏற்றுக் கொண்டால் வந்த கணக்கு முடியும். வேறு கணக்கு தொடராது. இது "யுகயுக" தர்மமாகும்!



உ

அந்த மூன்று யுகங்களுக்கும் பொருந்தும்.

இந்த கலியுகத்திற்குப் பொருந்தாதுதான்.

ஆனாலும்?

"ஸத்குரு சந்நிதி"

என்றென்றும் "ஓரேயுகம்தான்"!!

எப்படி யென்றால்? இக்கலியுக தோஷமானது:-

குருவானவர் ஓர் சந்தனக்கட்டையை, கொடுத்தாலும், அதை அந்த சிஷ்யனவன், அக்கட்டையை "உரசிப்பார்த்து" இது சந்தனக்கட்டைதான், என ஏற்றுக் கொள்வானே தவிர, குருமீது நம்பிக்கையாக அதை அப்படியே, ஆம் என ஏற்க மாட்டான்!

அப்படி ஏற்கக் கூடாது. இது கலியுக தர்மமாகும்!

ஆனால்? ஓர் ஸத்குரு தம் ஸத் சிஷ்யனிடம், ஓர் கட்டையை கொடுத்து, இது சந்தனக்கட்டைதான், என கொடுத்தால், அந்த ஸத்சீடனுடைய "உறுதியான" "குருபக்தியின், நம்பிக்கையினால்"



அது (சாதாரண கட்டையும்) "சந்தனக்கட்டையாகு" மாறியே ஆகவேண்டும்.

இதுவே "யுகயுக தர்மமாகும்!"

ஆனால் இது "பலப்பரீட்சை" அல்ல!

ஸத்குருவும், ஸத்சிஷ்யனும், இணைந்த ஓர் ஓர்மையாகும்.

அதாவது ஸத்குருவும் ஸத்சிஷ்யனும், "ஒருவர்"! பக்குவப்படவில்லையாயினும், அவர்கள் "நம்பிக்கை" பயனற்றுப் போகும்!

இங்கு ஸத்குருதேவரின் இயக்கம், "பர" கருணையே; "இறை" கிருபையாக இயங்குகிறது, என பொருள் கொள்ளவேண்டும். அதேநேரம் அந்த ஸத்சிஷ்யனை வன், மனோபரிபாகப்பட்டு விட்டானா? என கவனிக்க வேண்டும். இங்கு ஸத்சிஷ்யன்தான், சொல்லவேண்டும். அப்படி சொன்னால் "பேதம்" கற்பிக்கப்படுகிறது. ஆகவே "அபேத" நிலையில், ஸத்குருவையும் இணைத்தே சொல்வதே தர்மமாகும். மற்றைய மூன்று யுகங்களுக்கும், இதுபொருந்தியது.



உ

இக்கலியுகத்தில் இதுபொருந்தாது. ஆனாலும் இக்கலியுகத்தில், ஓர் உதவாக்கரைப் பைத்தியம் அனுபவிக்கிறது. அதை வாக்காலோ, வரிவடிவிலோ, சொல்வதற்கில்லை. அது பரம ரகசியமாகவே இருக்கிறது!

## "பொதுவான கருத்து"!

ஒருவரின் வாக்கோ, செயலோ, திட்டமிட்ட காரியமோ! ஆராதனை செய்யும் நீயோ, விதிக்கும் அப்பாற்பட்ட நிலையில் அந்த "விதிநாயகனையே" முழுமையாக எல்லாம் நீயே என்ற நிலையில், சரண் புகுந்து விட்டாய்! ஆகவே உன் விதி, இத்துடன் முடிவடைகிறது! இங்கு நீ "அடங்கிய" தன்மையில்தான், அனுபவமாகும் உனக்கேயன்றி பிறருக்கில்லை! ஆகவே பேசியதாகவோ, செய்ததாகவோ, வரும் "குற்றமாக" தோற்றும் ஒன்று, (அந்நிகழ்ச்சி) இச்ஜன்மாவோ, முன் ஜன்மாவோ, "கணக்கு" முடிகிறது எனை, (மௌனம் கலகநாஸ்தியென) அமைதியாக ஏற்றுக்கொண்டு, இனிச் செய்யோம் என்றும், செய்ததை மன்னிக்கவும் என்றும், "பணிந்து" விட்டால்



உ

நவம் பெறுமையும், என்பது ஸ்ரீமஹான்
களின், அனுபவமாக இருக்கிறது. ஆனால்
இக்கலியுகத்தில் இப்படி ஏற்று அனுபவிப்பது
"சற்று சிரமமே"! ஆனால்
ஓர் அணுப் பிரமாணம் அனுபவித்து விட்டாலும்
"பிரம்மானந்தமே"! இந்த ஆனந்தத்தில்,
அந்த சிரமம், அவஸ்யம் மறைந்துவிடும்!
அங்கு யாமே நீ; நீயே யாமாக இருப்போம். இது ஸத்தியம்!

"பணிவு" என்பது, இயலாத்தன்மையல்ல!
பணிவு என்பது சோம்பலல்ல! பணிவு என்பது உதவாத
உதவமுடியாததோர், "கழிசடையல்ல!"
(பொறுமையின் அம்சமே பணிவு)
"பணிவு" என்பது, அதிகாரம், ஆணவம், ஆதிக்கம்,
ஆக்கிரமம், ஆவேசம், அவசரம், படபடப்பு, எவையும் இல்லாத
"ஓர் கனிந்த கருணையின் தாம
மாகும்"! இது "இறைநிலையின்!"
பரிபூரண அம்சம் பெற்றதாகும். இது ஞானக்கிறுக்கல் ஆகும்!



உ

உன்றுபால் கண்டோம். அதற்கு மட்டும்,
சிறிய விளக்கம் தருகிறோம்.

உணர்வால் உணர்க!

1. உன் வாசகம் :— நாங்கள் பாராயணம்
செய்யும் போது, சித்தர்களும், மற்றும் ஞானிகள்,
மஹான்கள், அனைத்து அண்ட சராசரங்களிலுள்ள,
பெரியவர்கள், அனைவரும் அதன் சுவையை
அனுபவிக்கிறார்கள்.

ஆனால்? இந்த ஜீவன், அதன் சுவையை அனுபவிக்க
முடியவில்லையே. காரணம் என்ன?

அதற்கு மாறாக, பாராயணத்தை தட்டி கழிக்கின்ற,
எண்ணமே மேலோங்குகிறது. இதன் காரணம் என்ன?

எம் பதில் :— நல்ல கேள்வியே! இதை கவனி!
உடல் உலக (மண், பொன், பெண்) நாமரூப ஜகத்தை,
மூலமாக அடியோடு கெடுத்தாலன்றி "அவன்!"
(இறைவன்) ஆகமுடியாது. அவனே நாம் ஆகி, நாமே
அவனாகி, அவன் மாயாவை ஜயித்தாலன்றி
"அது" (பரசொரூபம்) நாம் அது, அதுவே நாம் என
ஆக முடியாது! அதன் அம்சமாகவே (தோற்றத்திலல்ல)



(அனுபவத்தில்) ஆனாலன்றி, அதன்நிலையிலுள்ள, ரிபு கீதையை பாராயணம் செய்ய முடியாது தான்!!!
அந்நிலையில், பாராயணம் செய்தால்தான்,
நீ மேலே கூறிய அனைவரும், சுவைக்க மாட்டார்கள்.
"சுவையாக" இருப்பார்கள்!
அது அந்த "ஒன்றுக்கே" பொருந்துமே
அல்லாது, தேவர் மூவருக்கும் பொருந்தாது!
இங்கு நீங்கள் காணும், அப்பனும் இல்லை! எந்த சுப்பனும் இல்லை! ஓர் ஸ்டிக்கரைப் பார்த்து, அதை அப்பனாக பாவனை செய்தால், அது ஸ்டிக்கர் குற்றமா? உங்கள் குற்றமா? அது ஸ்டிக்கர் குற்றமும் இல்லை! அது உங்கள் குற்றமும் இல்லை. உங்களை ஆட்டிப் படைக்கிறதே, "அம்மாயாமனதின்" குற்றமாகும்! அந்த ஸ்டிக்கரின் (அப்பாவியான அப்பாவின்) "நடை" (அவர் நடந்து கொள்ளும் விதம்) "உடை" (உங்களை மயக்கும் உடைமைகள்) "பாவனை"! (உங்களுடைய நாமரூப பாவனை) இவைகளே, உங்களை (உங்கள் மனதை) மயக்கிக் கொண்டிருக்கிறது!



அந்த "பொய்ப்பாவனையை" மறந்து அதை "அதாக" உணர்ந்தால் நீங்களும் அனுபவிக்கலாம்! உங்களிடம்

A. இன்னமும் நாமரூப குணதோஷங்கள் மறையவில்லை!

B. குற்றவுணர்வுகள் அழியவில்லை!

C. அஹங்காரம், அபிமானம், ஆதிக்கம், அதிகாரம், உடைமை, உரிமை மறையவில்லை!

D. உணர்ச்சிகள் கெட்டு, மெய்யுணர்வு ஓங்கவில்லை!

E. பொறுமையுடன் விட்டுக் கொடுக்க இயலவில்லை!

இவையாவும் முடிந்தால் இறைவனாகலாம். அவன் கருணையினால், அது ஆகலாம்! அது ஆனால் அதை சுவைக்கலாம்.

"சுவையே நாம்!" என ஆகலாம்.

ஹே எம் செல்வமே! நீ வசிக்கும் உன் ஊர் நாமரவோ "நாமக்கல்!" அதன் பொருள், "நாம் அக்கல்!" என பொருள் படும்!

பட்டமரம் போலும், குத்துக்கல் போலும், ஆகவும் என்று தான் எம் ரிபு முனிவன் சொல்கிறான். நாம் அந்த அசையாத கல் போன்றவனே என அசைவற்றிருக்க முயற்சி செய். (உன்னால் முடியும்) நீயும் அனுபவிக்கலாம். சர்க்கரை என சொன்னால், மதுரம் தோன்றுமா? அதை சுவைத்தால் தானே, மதுரம் தோன்றும். பின் மதுரமாகவே ஆகலாம்!



௨. உன் வாசகம் :- பக்தியும், தத்துவார்த்தமும், கலந்த பாடல்கள் மட்டுமே, சுவைக்கிறது. மற்றைய பாடல்கள் சுவையை, உணர முடியவில்லையே, காரணம் என்ன?

எம் வாசகம் :- ரிபு கீதையின், அனைத்து பாடல்களும், தத்துவம் நிறைந்த பாடல்களே! உன் மனக் கண்ணுக்குத் தோன்றவில்லை. உன் அறிவுக் கண்ணைக் கொண்டு, உணர்ந்தால் புரியும்.

“கற்கண்டை” கண்ணாடிக்கல் என பார்த்து, கடிக்காமலேயே துப்பி விடுகிறாய்! அதை சுவைத்தால்தான், இது கண்ணாடிக்கல்லா? கற்கண்டா? என உணர முடியும். சுவையும் தோன்றும்!

௩. உன் வாசகம் :- பாராயண சமயங்களில், உறக்கம் மேலிடுகிறது. சில சமயங்களில் அது சமயம், நம் சக்தியை உறிஞ்சுவது போல், ஓர் உணர்வு உண்டாகிறது.

எம் பதில் : (சிரிப்பு தான் வருகிறது) பாடல்களில் “கவனமின்மையே” காரணமாகும். இங்கு தான், பரகருணையாகிய, குருகிருபை மேலிடுகிறது. அது உறிஞ்சுவதல்ல. நாமொரு மருந்தை “ஊசி மூலமாக” உள்ளே செலுத்துவதாகும்!



4. உன் வாசகம் :- 1. கிடைத்தற்கரிய மானிடப்பிறவி! 2. முக்தியை அடைய வேணுமென்ற இச்சை! 3. பரகருணையே ஸத்குருவாய் வந்து ஆட்கொண்டது! இப்படி இம்மூன்றும் கிடைத்தும்,

A. காலாதீத ஒன்றாக, நாம் இன்னமும் ஆகவில்லையே? என்ற ஏக்கமில்லை, இச்ஜீவனின் நிலை, மிகவும் பரிதாபகரமாகவே தோன்றுகிறது!

B. இல்லத்தில் இவன் பெரும்பாலும், பாராயணம் செய்வதில்லை.

**"கவலைப்படவேண்டிய" விஷயம்!!!**
பாராயணத்தில் கவனம் தேவை. அது உன் உயிர்!!

C. நம் ஸ்வாமிஜீ அவர்கள், பிரயாண காலங்கள் தவிர, அனைத்து நாட்களிலும், ஒருநாள் கூட விடாமல், ரிபுகீதை பாராயணம் செய்கிறார். ஆகவே? "**நாம் ஏன் பாராயணம்??** செய்ய வேண்டும்? நமக்கும் சேர்த்துத்தான், அவர் பாராயணம் செய்து வருகிறாரென, மனதை "**சாந்தி சமாதானம்,**" செய்து கொள்வது "**தவறு சரியா??**" (மஹாபெரிய தவறாகும்)



உ

எம் வாசகம்:- ஓர் சிறிய விளக்கம்!

1. ஓர் பெண் பருவமானால் தான், அவள் திருமணத்திற்கு உரியவளாகிறாள். அதைப் போல "சிரத்தை!" உள்ளவனே, உத்தமமானவனாகவும், ஜீவன் முக்திக்கு தகுதி உடையவனாகிறான்!

2. ஓர் நல்ல குணவான், அவளுக்கு மணாளனாக அமைகிறான். ஜோடி பொருத்தம் சரியாக அமைகிறது. அதைப் போல பூர்வபுண்ணியமும், இறைகிருபையும், இணைந்த தன்மையினால், ஓர் ஸத்குரு கிடைக்கிறார்.

3. அம்மணவாளன், குறிப்பிட்ட காலத்தில், பெரியோர்கள் முன்னிலையில், அப் பெண்ணின் கரம் பற்றி, அக்கினி சாட்சியாக கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுகிறான். சம்பிரதாயப் படி, அத்திருமாங்கல்யமானது, ஓர் "மஞ்சள்" கயிறும் மஞ்சள் (கிழங்கு) துண்டும் இணைந்ததாக இருக்கும்.

அதேபோல் ஸத்குருதேவர், அந்த ஸத்சிஷ்யனுக்கு, முறைப்படி "அத்வைத" பாடம் சிரவணம், மனனம், இவைகளில், அதிசிரத்தையோடு தினமும்



உ

"பாராயணம்" செய்யச் சொல்கிறார். அவனும் அவ்வாறே செய்கிறான்.

4. நம் அழகான மனைவிக்கு, மேலும் அழகு பளுக்கும் நிமித்தம், விதவிதமான "ஆவரணம்" செய்து, உச்சிமுதல் இடுப்புவரை பூட்டுகிறான் அந்த உத்தம கணவன்.

அதைப்போல, வேதாந்த கருத்துக்களை, "எளிய முறையில்" புகட்டி, உயர்நிலைக்கு, அந்த பக்தியை, ஸத்குரு தேவர் கொண்டு வருகிறார்.

5. இப்போது அழகுக்கு அழகான அப்பெண், தம் அழகிலேயே தாம் மயங்கி, ஓர்நிலைக் கண்ணாடியில், தம் "மனதின் கற்பனைக் கண்ணால்" காணும் போது, தம் அழகில், அந்த மஞ்சள் கயிறும், மஞ்சள் துண்டும்! அநாகரீகமாகவும், அசிங்கமாகவும், தோன்றுகிறது. (ஓர் கரும்புள்ளியாக தெரிகிறது) → தேவையற்றதாகவும்

அதைப்போல, வேதாந்த கருத்துக்கள், குருகிருபையால், எளிமையாக உணர்ந்த தன்மையினால், அதுவே நாம், நாமே அது! என "அநுபவமாகி" விட்டதைப் போல்



ஓர் அறியாமையின் "மயக்கம்" உண்டாகி விட்டதால். இனி தினமும் செய்யும், பாராயணம் தேவையில்லையே (தலைக்கனத்தால்) என்ற "கவலைக்குறை விலைஸ்" அதைவிட எத்தனிக்கிறான்!

மஞ்சள் கயிறும், மஞ்சளும் தான், அவள் "சுமங்கலி" என்பதை, உணர்த்தும். இவள் மனைவி, இவன் கணவன் என்பதை, தெய்வ சபைக்கு, உணர்த்துவது மஞ்சள் கயிறும், மஞ்சளும் தான்!!! (இங்கு மஞ்சள் கயிறே பொன். ஆபரணம் அல்லதுமன்றே) அதைப்போல, இவன் ஜீவன் முக்தன் நிலைக்கு, தயாராகிறான் என்பதையும். இவன் ஸத்குரு வாக்கியத்தை, சிரத்தையுடன் ஏற்றிருக்கும், "ஸத்சீடனும்" இவனே என உணர்த்துவதும், "அகம் பிரம்மாஸ்மி" என உணர்த்தும், நித்திய பாராயணமாகும்.

இங்கு நீ கேட்கலாம். அந்த 140 பாடல்களையும், நம்பரைச் சொன்னால் போதும், உடனே அதை மனப்பாடமாக ஒப்பிக்கிறேனே! என்று அப்படி ஸ்பஷ்டமாக தெரிந்த ஒன்றை,



ஏன் திரும்ப திரும்ப, பாராயணம் செய்ய வேண்டும்? என கேட்கலாம்.

யாம் சொல்கிறோம்; படித்தாய் அறிந்தாய் “உள்ளபடி உணர்ந்து” கொண்டாயா? அனைத்து (குண தோஷ) வாஸனைகளும் மறைந்து விட்டதா? என்றால், இல்லை என்பாய். அதுவாய் ஞானமாகும். நாம் அது, அதுவே நாம்! என்பது மிக மிக மிக எளிதே!

நாம ரூப ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின், “குண” தோஷங்கள், இக்கலியில் சாமான்யமாக போகாது. அனைத்து நாமரூப ஜகத் ஜீவர்களும், “பொம்மலாட்டமாகவும்”! அருத்து, அவை அனைத்தும் “மண்ணைத”யும் தோற்றி உணரும் பரியந்தம். அகம் பிரம்மாஸ்மி என்ற, நித்திய “பாராயணம்”! அவஸ்யம் தேவை.

இதை இன்னொரு வகையில், சொல்வது என்றால்?

முன்பே யாம் சொன்னோம். இது பிரமாண வாசகமாகும்.

இப்வைத்தியம், எங்கெங்கு பாராயணம் செய்தாலும், அது “மைக்கல்”! அது “உங்களுக்கே”!



அப்பாராயண வாசகமானது, நீங்கள்
கேட்டாலும் கேட்காவிட்டாலும் அது
“ஊசி” மருந்து போல், உங்களுள்
வேலை பார்க்கும். இது சத்திய வாசகமாகும்.

அந்த ஊசி மருந்தானது, முன் கர்மாவின் பிணியை,
அணு அணுவாக சிதைத்து, குணப்படுத்தும்! தற்காலிக
ஜக, வாச, தோஷ, பழக்க, வழக்கங்களில் உங்களை
அறியாமலே, ஏறும் குணதோஷமென்னும், விஷக் கிருமிகளை
அழிப்பதற்கே, நித்திய பாராயணம் என்னும் மருந்தை
வெளிப்பிரயோகமாக கொடுக்கிறோம்.
அதையும் “நீயே சாப்பிடு” என எம்மிடமே
கொடுத்தால் ??????????????????????????
வியாதி உங்களுக்கா? எமக்கா?? ஊசி போட்டு
மருந்தை உங்களை அறியாமலேயே, “உள்ளே”
செலுத்த முடியும். ஆனால் மருந்தையும், நீயே சாப்பிடு
என்றால், அது எப்படி முடியும்? எவ்வாறு பொருந்தும்??



உ

பிறர் உண்டால் உன் பசி தீருமா?

நீ உண்டு பிறர் பசியை போக்க முடியுமா?

"தாயும் பிள்ளையும் ஆனாலும்.

"வாயும் வயிறும்" வேறு வேறுதானே?

நிச்சயமேது! அகம் பிரம்மாஸ்மி என்ற ஸத்குரு நித்திய வாக்கிய பரிபாலனமே, "பாராயணமே"!

(ஸத்குரு பிந்துஸ்தானமே) ஞானமாகிய கர்ப்பமாகும்!

உன் கர்ப்பத்தில் உள்ள, "ஆனந்தம்" என்ற "சுவை" நீதான் பெற்றெடுக்க முடியும். வேறு எவரும் பெற முடியாது! உன் கர்ப்பத்தை நீதான் (எந்த கஷ்டப்பட்டாலும்) பெற்றெடுக்க வேண்டும் (உனக்காக வேறொருவர் பிள்ளையை பெற முடியாது!) (தரவும் முடியாது.)

அகம் பிரம்ம பாவனையாகிய (நித்திய பாராயணம்) அவசியம் தேவை! யாம் பாராயணம் செய்வது, ஊசி மருந்து. நீங்கள் பாராயணம் செய்வது, வெளி மருந்து. இவ்விரண்டு மருந்துகளும் இணைந்தால்தான், பூரணமாகிய ஜீவன் முக்தி பெற முடியும்.



உ

எம் குழந்தைகளே!

தூக்கம்! தூக்கம்!!

என சொல்கிறீர்களே! அது எப்படி உங்களை ஆட்படுத்துகிறது? என உணர்ந்து பார்த்தால் அது உங்கள் "**கவலைக்குறைவு**" என நன்றாக உணரமுடியும்! பணம் எண்ணும் போது தூக்கம் வருமா? மானம் பறிபோகும் போது தூக்கம் வருமா? உடைமைகளும் உரிமைகளும் பறிபோகும் போது தூக்கம் வருமா? நாளை காலன் வருவான் என தெரிந்தால் தூக்கம் வருமா?

இவை அனைத்தும் உங்கள் அறியாமையின் குணங்களாகும். இங்கு "**துக்கமும் தூக்கமும்**" இடம் மாறி செயல்படுகிறது. துக்கம் பிடிக்கிறது. தூக்கம் பறந்தோடி விடுகிறது (பணத்தில் மட்டும் அதன் மோகத்தினால் தூக்கம் பறந்தோடி விடுகிறது!)

காலாதீத ஒன்றாக இல்லையே என்ற கவலை தேவையில்லை. அதே போல் பரமுக்தியாகிய, பிறவா நிலை கிட்ட வேண்டுமே என்ற கவலையும் தேவையில்லை. எந்த நிலையிலும், முக்காலத்திலும், "**அது**" ஆகத்தான் நீ இருக்கிறாய். இது சத்தியமே! நீயே உன்னை உன் மனதால், அஹங்காரம், அதிகாரம், அபிமானம், ஆதிக்கம் உடைமை, உரிமை பாராட்டுதல், இவைகளால் திரையிட்டு மூடிக்கொண்டாய். இங்கு இறைவனும் பொறுப்பல்ல! ஸத்குருவும் பொறுப்பல்ல!! உன் "**மனமே**" பொறுப்பாகும்!

நீயும் யாரும் ஒன்றே! நாம் இருவரும் அந்த ஒன்றே!

அதுவே நாம்! நாமே அது! என அம்மா சுகமாக இருப்பாயாக.

பாபா



ஓம்

ஸத்தியம் பேசு. (ஸத்திய வாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்."

# "ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"

# "நம்பினோர் கெடுவதில்லை"

# பக்தியின் விளக்கம்!

எம் ஆத்மஞானக் குழந்தைகளே!

## "1. பக்தி"!

என்பது, ஓர் உருக்கத்தின், அக்கினியாகும். இந்த உள்ள உருக்கத்தினால், நெகிழ்வினால், கண்ணீர் கொட்டும் கசிவினால், உங்கள் உள்ளம் கழுவப்பட்டு, அது தூய்மையாகும். அதுவே உங்கள், ஸ்ரீபகவானின் ஆலயமாகும். அனைத்தும் அவன் பொருளாக இருப்பதால், அவன் பொருளை, அவனுக்கு கொடுக்க, உங்களுக்கு அருகதையில்லை. ஆகவே



உ

அபிஷேகமோ, ஆராதனையோ, நிவேதனமோ, அலங்காரமோ மற்றும் அனைத்தும், "ப்ரவிருத்தி" (பிரவர்த்தி) என்ற புறச்செயலாகும். அவை அனைத்தும், பிறர் புகழும் நிலைக்கு உள்ளாகும். அதனால் உங்களுக்கு, ஓர் பிரயோஜனமும் இல்லை, யென்றே சொல்லலாம். அவனிடம் இல்லாதது, உங்கள் இதயமே. அந்த இதயத்தை, அவனுக்கு "ஆலயமாக்குங்கள்"! உங்கள் கண்ணீரை அவனுக்கு, "காணிக்கை"! ஆக்குங்கள். ஸ்ரீ பகவான் உங்கள் வசமாவான். இது இப் பைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும்!

௨. ஸ்ரீ புண்டரீகன் என்ற, ஓர் பக்தனுக்காகவே, எம்பிரபு பண்டரியில், கோயில் கொண்டுள்ளான். அந்த புண்டரீகன், என்ன செய்தான் என்பதை, மட்டும் உணரவும். "ஸ்ரீமாதா, பிதா"! சேவை ஒன்றே செய்தான். ஆகவே ஸ்ரீமாதா, பிதா! சேவை, அதி முக்கியத்வம் வாய்ந்ததாகும். ஸ்ரீமாதா, பிதா சேவையினால், எம்பிரபு வைகுண்டபதியானவன், பண்டரி பதியாக வந்து நின்றான்.



உ

இங்கு ஒன்றை கவனிக்கவும்!

பக்தன் கோரும் வரம்!

1. கலியுகம் முடியும் பரியந்தம், நீ இந்த செங்கலை விட்டு, இறங்க கூடாது.

2. பக்தர்களுக்காகவே தருவித்த, இந்த பீமா நதியில் (சந்திரபாகாவில்) மூழ்கும், அனைவருடைய பாவங்களும், நிவாரணமாக வேண்டும்!

3. எந்த விநாடியும் "சௌலப்ய"! தர்சனம் (அலங்காரம் ஆடம்பரம் இல்லாத நிதரிசன தர்சனம்) அதாவது "ப்ரத்யட்ச" சொரூப தர்சனம் தொடுத்துக் கொண்டே, உன் அபயகரத்தை அசைக்காமல், (அக்கரங்களை இடுப்பில் வைத்த வண்ணம்) மயில்பீலியுடன் "தலையசைத்து" தலையசைத்து, ததாஸ்து! ததாஸ்து! ததாஸ்து! ததாஸ்து! ததாஸ்து! என, ஆசி வழங்கிய வண்ணம் "நின்றநிலையில் தான்" நீ காட்சி அளிக்க வேண்டும். (அமரக்கூடாது)

எம்பிரபு சரி குழந்தாய்! அப்படியே ஆகட்டும். உன் வாக்கின்படி, யாம் நிற்கிறோம். ஆனால் நீ எமக்கு, ஓர் வரம் தர வேண்டுமென்றான், எம் விட்டலன். பக்தன் திகைத்தான். ஸ்ரீ பகவானுக்கு ஓர் பக்தன், வரம் கொடுப்பதா? புரியாத புதிராக இருக்கிறதே என எண்ணி, ஹே பிரபோ! அது என்ன வரம் என்றான்?



உ

## ஸ்ரீபகவான் கோரும் வரம்?

ஹேபுண்டலீகா! இது கலியுகமாகும்.
உலகமெங்கும், எம்பக்தர்கள் பரவி
இருக்கிறார்கள். வறுமையாலும்,
பிணியாலும், இயலாத்தன்மையாலும்,
எம்மிடம் வரமுடியாத தன்மையால் ~~அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு,~~
இருக்கும் பக்தர்கள் ஹேபிரபோ! ஆபத்பாந்தவா!
அநாதை ரக்ஷகா! தீனபந்தோ! தீனதயாளு! கிருபாசாகரா!
**“ஹரே விட்டல்! ஹரே விட்டல்”** என
உருகி, கதறி, அழைக்கும் போது, யாம் அங்கு போய், அவர்
களுக்கு, ஆவன செய்துவிட்டு, வரும் நிமித்தமாக, யாம்
இந்த செங்கலை விட்டு, இறங்கி ஏற **“அனுமதி”!**
தரு
பணிந்து
வேண்டுமென், எம்பிரபு அந்தபக்தனிடம், வரம் கேட்டான்.
அப்படி கருணையே வடிவான, ஸ்ரீபகவானை காணமல் குடும்பம்,
தொழில், பணம், பதவி என, ஏன் அலைய வேண்டும்? அவன்
வந்தால், அனைத்தும் வந்து விடுமே!! ஆகவே அவனை கூப்பிடுங்கள்

**3.** விட்டல் என்று **“மண், பெண், பொன்.**
இவைகளின் **“மோஹ, போகங்கள்”!**
(மண், பெண், பொன், போகமும், வேணும்)
விட்டு அகல் எனப்பொருள் படும். இவைகளும் வேணும்.
ஸ்ரீபகவானும் வேணும் என்றால், அது முடியாத காரியமாகும்.
ஏதாவது ஒன்றைத்தான் நீகாண முடியும்! அனுபவிக்க முடியும்!!



உ

இரண்டு இல்லவே இல்லை. கல்லாக கண்டால், நாய் இல்லை! நாயாகக் கண்டால், கல் இல்லை! மரமாகக் கண்டால், யானை இல்லை! யானையாக கண்டால், மரம் இல்லை! கயிறாக கண்டால், சர்ப்பம் இல்லை! சர்ப்பமாக கண்டால், கயிறு இல்லை! கட்டையாக கண்டால், கள்வன் இல்லை! கள்வனாகக் கண்டால், கட்டை இல்லை! சிப்பியாக கண்டால், வெள்ளி இல்லை! வெள்ளியாக கண்டால், சிப்பி இல்லை! இதைப்போல!!!

கண்கள் இரண்டு இருந்தாலும், காட்சி ஒன்று தான்!

உலக பொருள், நாமரூபமாக கண்டால், அங்கு ஸ்ரீபகவான் தென்படமாட்டான். ஸ்ரீபகவானாக உணர்ந்தால், நாமரூப ஜகம் தோற்றாது! இதன் சாதனை??? எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்!

"அவனன்றி அணுவும்" அசையாது

என்பதே ஸத்தியமாகும். இதை அனுபவமாக உணர்ந்து விட்டால், ஸ்ரீபகவானை காணலாம், அவனை அனுபவிக்கலாம். உலக பொருள் அனைத்தையுமே உனக்காகவே படைத்தான்! நன்றாக விளையாடு!

விளையம் (லீலை) ஆக்காதே. அதாவது,

"உடைமை", "உரிமை", "ஆதிக்கம்", "அஹங்காரம்", "அபிமானம்", "அதிகாரம்" இவைகள் வேண்டாம்.

ஆறும்



உ

கொடுத்தவைகளை நினைக்கிறாய்!

கொடுத்தவனை மறந்து விட்டாயே!!

இது என்ன "நியாயம்"???

4. பெண்களாகிய நீங்கள், கைபிடித்த கணவனையே, ஸ்ரீபகவானாக நம்புங்கள். பணிந்து சேவை செய்யுங்கள். அவஸ்யம் ஸ்ரீபகவான், உங்களைத் "தேடி" வருவான்.

ஆண்கள் அனைவரும் உங்களுடைய, ஸ்ரீமாதாபிதா தாவும் உள்ள மட்டும், தினமும் சாஷ்டாங்க நமஸ்காரமும், "சேவை"யும், அவஸ்யம் செய்யுங்கள். ஸ்ரீபகவான் உங்களைத் "தேடி ஓடி" வருவான். இது பிரமாண உண்மை!

கலியின் கோரமான குண தோஷங்களாலும், அனைவரும் வக்ர குணங்களை அடைந்து, உங்கள் தெய்வ வழிபாட்டை, ~~மறந்து~~ அதை வியாபாரமாகவும், விளம்பரமாகவும், ஆடம்பரமாகவும் ஆக்கிக் கொண்ட தன்மையிரால், எந்த ஆலயங்களிலும், உங்கள் இல்லங்களிலுள்ள, பொம்மை படங்களிலும், நீங்கள் வழிபடும் எந்த "ஸ்ரீபகவானும்" இல்லை யென்றே, பிரமாணமாகச் சொல்லுவோம்!



உ

பொறுமை, அன்பு, கருணை, அடக்கம், கலந்த ஸ்ரீபகவான் மீது "ஆழமான நம்பிக்கை"யுடன் கசிந்து, உருகி, கதறி, அழுது வேண்டும்,

"எந்த உள்ளங்களிலும்"!

இங்கு ஜாதி, மதம், இனம், மொழி, சிறியவன், பெரியவன், பண்டிதன், பாமரன், ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் ஸ்ரீபகவான் வாசம் செய்கிறான் என்பதும், அனைவர்க்கும், ஸ்ரீபகவான் காட்சி கிடைக்கும் என்பதும், உறுதி கூறுகிறோம்.

5. ஏ கேடுகெட்ட மானிடனே! பொன் பொருளுக்கு அழுகிறாய்! பெண்ணுக்காக அழுகிறாய்! மண்ணுக்கு அழுகிறாய்! இல்லாத வாழ்வுக்கு அழுகிறாய்! பட்டம், பதவி, பணத்திற்கு அழுகிறாய்! பிள்ளைகள் பேரன் பேத்திகளுக்காக அழுகிறாய்! வியாதிக்காக அழுகிறாய்! வறுமைக்காக அழுகிறாய்! உணவு உடைக்காக அழுகிறாய்! பசிக்காக அழுகிறாய்!

"உனக்காக அழுகிறாயா???"

இல்லவே இல்லை! மனுஷ்ய ஜன்மா தொடுத்தானே! அவனுக்காகாத ஜன்மா இருந்தென்ன? போயென்ன? அவனை தரிசிக்காத ஜன்மா பிறந்தும் வீண்தானே? நம் ஒவ்வொரு அடியிலும், காலன் பின்தொடர்கிறானே? காலன் நம்மைப் பற்றுமுன், காலனுக்கும், காலனான ஸ்ரீபகவானை காண வேண்டுமே? இன்னமும் ஸ்ரீபகவானைக் காணவில்லையே என கதறி அழுதாயா?

(அதுவே உனக்காக நீ அழும் அழுகையாகும்)



அன்னை யெத்தனை, யெத்தனை அன்னையோ?
தந்தை யெத்தனை, யெத்தனை தந்தையோ?
பெண்டீர் யெத்தனை, யெத்தனை பெண்டீரோ?
பிள்ளைகள் யெத்தனை, யெத்தனை பிள்ளைகளோ?
பிரம்மன் படைத்து, படைத்து அலுத்துபோனான்!
தாய் பெற்று, பெற்று அலுத்து விட்டாள்!
உறவினர் அனைவரும், அழுது அழுது அலுத்துவிட்டனர்!
அக்கினியும் எம்மை, உண்டு உண்டு அலுத்து விட்டான்!

**பிறந்து, இறந்து, இறந்து, பிறந்து, வாழும்** அலுத்துப் போனேன்!
**படைப்பெலாம் போதுமையா!**
போதும்!

ஏங்கி, கதறி, அழுதாயா? ஸ்ரீ பகவானை அழைத்தாயா?
மனம் உருகி உருகி கரைந்தாயா? கண்ணீர் ஆறாகப்
பெருகச் செய்து, அவன் பாதங்களை கழுவினாயா? உன்னை
நாதை வாழ்வு, தேவையில்லையென, அழுது முறையிட்டாயா?
"கூவி அழும் பிள்ளைக்கே, வயிறு நிறையும்".
என்ற ஸ்ரீ மஹான்களின் வாக்கு ஸத்தியமே!
சுமார் 100 வருஷங்களுக்கு முன் வாழ்ந்து, நமக்கு அனுபவம்
தந்த, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் அன்று சொன்னார்.

**மூன்று தினங்கள் போதும்!**
**ஸ்ரீ பகவானை காண்பதற்கு!**
என்றார்.



ஆனால், "இன்று" இந்த உதவாக்கரைப் (உதவ அக்கரைப்) வைத்தியம், நம் ஸ்வய அநுபவநிலையில், ஸத்தியமாக ஸத்தியவாக்காக சொல்கிறது!!!

"ஒருநாள்!" போதும் ஸ்ரீபகவானைக் காண!

"முயற்சி" உன்னிடம்! "பலன்" அவனிடம்!

6. ஓர் மஹத்தான உண்மையை உணர்:—

பிரமாணமாகச் சொல்கிறோம். ஸ்ரீ பரமாத்மா! எந்த விநாடியும், எக்காலமும், உன் "முன்னே" பிரத்தியக்ஷமாக, சாக்ஷாத்காரமாக, "ஸ்வயமாகவே!" நிற்கிறான்.

ஆனால் நீ அவனை காண முடியவில்லையே! இதன் காரணம் என்னவென்றால், "உன்முன்னால்!" ஓர் திரையை, நீயே போட்டிருக்கிறாயே! அங்கு மாயை என்ற திரையை, ஸ்ரீபகவான் போடவில்லை! உன் கவனக்குறைவு என்ற, அறியாமையின் திரையை, நீயே போட்டுக்கொண்டு, ஸ்ரீபகவான் மாயாசொரூபம் என்றாய்;



உ

அவனே தன்னை தம் மாயையால், மூடிக்கொண்டான், என்றும் அவனைக் குற்றம் சொல்கிறாயே? இது நியாயமா?

உனக்கு எப்போதும் பிறரிடம், குற்றம் கண்டே பழக்கம்! அந்த பழக்கம், உன்னிடமிருந்து, என்று தொலைய போகிறதோ, அன்றுதான் உனக்கு விமோசனம்!

யாம் உன் திரையெனச் சொன்னது? எது தெரியுமா?

"மானவமானம்", "கேடு", "ஈர்ஷை", "லஜ்ஜை", "வெட்கம்", "மானாபமானம்" ஆகிய இவைகள் கலந்த, "அபிமானமே"! உனக்கு நீயே போட்ட திரையாகும்!

இத்திரையை நீதான், அகற்ற வேண்டுமே தவிர, வேறு எவராலும், இத்திரையை அகற்ற முடியாது, என்பது பிரமாண வாசகமாகும்!

இங்கு எம் கருணையே வடிவான, ஸ்ரீபகவானை குறை கூறுவது, தவறாகும். இங்கு நாம், ஒன்றை கொடுத்தால் தான், மற்றொன்றை, நாம் வாங்க முடியும்! ஆகவே முதலில் "உன்னைக்கொடு"! "என்னை வாங்கி விடலாம்"! இதுவே இந்த, உபதவாக்கியத்தின், ஸ்வய அனுபவமாகும்! (உன்னை கொடு என்பது அஹங்கார அபிமானத்தை விடு என்பதாகும்)



7. உ

"நான்" இறந்தால், அங்கு
"நாம்" ஆகலாம். இங்கு
நாம் ஆனால், அவன் ஆகலாம்.

பின் "என்னுடையது" இறந்தால், அங்கு
"எம்முடையது" என நாமமே மாறும்!

எம்முடையதில், ஸ்ரீ பகவானையும் சேர்த்து இணைத்துக் கொண்ட தன்மையினால், அங்கு?

"அதிகாரம் ஏது? "ஆதிக்கம் ஏது? "அபிமானம் ஏது?
'உடைமைகள் ஏது? "உரிமை ஏது? அஹங்காரம் ஏது?

இவ்வறுவரும், அழிந்த இடத்தில், ஒன்றுதானே உண்டு.
அந்த ஒன்று நம் ஸ்ரீ பகவான் தானே?

எல்லாம் ஸ்ரீ பகவான் பொருளே என்றும், எல்லாம் ஸ்ரீ பகவான் செயலே என்பதும் ஸத்தியமானால், உனக்கு இருப்பு ஏது? இயக்கம் தான் ஏது? ஆகவே இங்கு,

எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே என உன்னை ஆக்கிக் கொள்.

அவனைக் காணலாம். பின் அவனே ஆகலாம். பின் அவனும் நீயும், இணைந்து கரைந்து,

அது

பாபா.

என ஆகலாம். இது ஸத்தியம். ஸத்தியம். ஸத்தியம்.



உ

# 8. ஸ்ரீபாண்டுரங்க தரிசனம்! நின்ற நிலையில் ஏன்?

பாண்டுரங்கனிடம், ஸ்ரீ பாத ஸ்பரிசனமும்,
ஆலிங்க தரிசனமும் தான், முக்கியமானதாகும். ஓர்
உண்மை என்னவென்றால் அவன் நின்ற கோலத்தில், நான் அவனுடைய
பொற்பாதங்களை, கசிந்த உள்ளத்துடனும், கண்ணீர் பெருக்கத்
துடனும், பற்றி வருடிக்கொண்டு, "ஹே ரங்க
நாதா"! என உருகி அழைத்து நாம் மெய் மறக்கும்
போது, எம்பிரபுவினுடைய, "திருமுடி" (சிரசானது)
ஓர் பக்குவ ஆன்மா, நம் திருவடியை ஸ்பரிசிக்கிறதே என,
உணர்ந்து கீழே குனிந்து, பார்த்து நம்மை தூக்கிய நிலையில்,
ஆரத்தழுவி, உச்சிமோந்து, "நலம் பெறுக!" என
ஆசி வழங்குகிறது. இது இப் பைத்தியத்தின் அனுபவமாகும்.
இந்த பேரானந்தம், அவன் அமர்ந்த நிலையிலோ, அவன் சயன
நிலையிலோ, நாம் பெற முடியாது. நின்ற நிலையில் தான் முடியும்.


பக்தியின் நிலையில், ஏக்கம், உருக்கம், கண்ணீர் பெருக்கம், வேண்டும்.
,, ,, வேகம், அவசரம், படபடப்பு, ஆவேசம், வேண்டாம்.

மேலே சொன்னது யுகயுக தர்மம்! கீழே சொன்னது கலியுக தர்மம்.

இக்கலியில் கடின பயிற்சியோ, கடின முயற்சியோ, கடின உபாசனையோ
மந்திர தந்திர யந்திர ஜபதவங்களோ தேவை இல்லை. அழுதால் உன்னை பெறலாம்
என்பதே சத்தியமாகும். மனஉருக்கத்திலும்
கண்ணீர் பெருக்கத்திலும்

பாபா.

மிஞ்சிய பக்தி இல்லவே இல்லை. இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!!!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!